நங்கையர் முனைக் கொள்ள கொள்ளும்
தங்க, வைர நகைகளுக்கு

அம்பிகா ஜுவலர்ஸ்

77, செட்டியார் தெரு, கொழும்பு-11.

தொலைபேசி 422839, 434238



செய்தி இதழாக பதிவு பெற்றது

# தினபதி

ரூ 3/50

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல 6593 1990 மே 21 திங்கட்கிழமை ★ ★ ★ දිනපති



தரமான 22 கரட்
தங்க வைர நகைகளுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்

Ambiga
JEWELLERS (PTE) LIMITED
SEA STREET, COLOMBO-11.
Phone: 422839 434238


அரச திணைக்களங்கள் மற்றும்

# தோட்டத்துறை பாதுகாப்பு சேவைக்கு தனி இராணுவ தொண்டர்படை

## இதில் இதுவரை 1800 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர் என இராணுவ தளபதி தகவல்

கொழும்பு, மே 20

அரச திணைக்களங்களினதும், தோட்டப் பகுதிகளின தும் நிலையான பாதுகாப்பு தேவையான ஏனைய இடங்களினதும் பாதுகாப்புக்காக தனியான இராணுவ தொண்டர் படைப் பிரிவொன்று அமைக்கப்பட்டு வருகிறது.


ஏற்கனவே இந்தப் பிரிவில் 1,800 க்கு மேற்பட்ட வீரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தெரிவித்தார்–

பட்ட தேசிய துணைப் படை தற்போது படிப்படியாக கலைக்கப்பட்டு வருகிறது–

இந்தப் படையில் மொத்தம 3,000 வீரர்கள் இருந்தனர்– இவர்களில் சுமார் 1,000 பேர்

வீரர்கள் எம பிக்களின் பாதுகாப்புக்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்–

தற்போது அரச திணைக்களங்களின் பாதுகாப்புக்காக அரசு விசேட படைப் பிரிவு



கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் விசேஷ விருந்தினர் அறையில் உலக இஸ்லாமிய அழைப்பு இயக்க பொதுச் செயலாளர் டாக்டர் மொகமட் அகமட் அல் – ஷெரீப்புடன் முஸ்லிம சமய, கலாசார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ எச் எம அஸ்வர், முஸ்லிம காங்கிரஸ் தலைவரும், உலகளாவிய தெற்காசிய நாடுகளின் ஜன ரஞ்சக இஸ்லாமிய தலைமைத்துவ அமைப்பின் நிறைவேற்றுக் குழு அங்கத்தவருமான ஜனாப் எம எச் எம அஷ்ரப், பாமிஸ் இயக்கத் தலைவர் ஜனாப் எம எம சுஹைர் ஆகியோர் அளவளாவும காட்சி.

(படம: எம ஏ பகுர்தீன்)

## இன்று இஸ்லாமிய தஃவா கருத்தரங்கு கொழும்பில்

அங்குரார்ப்பணம செய்து வைப்பார்–

## திருமலையில் புலிகள், இராணுவம் பொலீஸ் சந்திப்பு

திருகோணமலை மே 20

திருகோணமலை மாவட்ட புலிகள் இயக்க அரசியல் பொறுப்பாளர் திரு ஆ ரூபன் நேற்று திருகோண மலையில் உள்ள இராணுவ மற்றும் பொலீஸ் அதிகாரிகளையும சந்தித்த தற்போதைய நிலைமை தொடர்பாக கலந்துரையாடினார்–

இராணுவ கேர்ணல் தென்

[2ஆம் பக்கம பார்க்க]

## சம்பிரக்ஞானந்த சுவாமி சமாதி

### நேற்று ஈமக்கிரியைகள்

கொழும்பு மே 20

கொழும்பு ஸ்ரீ இராம கிருஷ்ண மிஷன் தலைமைச் சுவாமி சம்பிரக் ஞானானந்த நேற்று முன்தினம சமாதியானார்– அவருடைய ஈமக் கிரியைகள் நேற்று கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெற்றன–

சுவாமி சமாதியான போது அவருக்கு வயது 74– சிறிது

[2ஆம் பக்கம பார்க்க]

மலையகத்தில்

## வேலை நிறுத்தம் முடிந்தது உண்ணாவிரதம் தொடர்கிறது

கொழும்பு மே 20

மலையக மக்கள் முன்னணி தலைவர் திரு சந்திரசேகரனை, விடுதலை செய்யக் கோரி நடைபெற்ற வேலை நிறுத்தம முடிந்தது. ஆனால், உண்ணாவிரதம தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தலவாக்கொல்லை ஸ்ரீ கதி

[2ஆம் பக்கம பார்க்க]

## ஜனாதிபதி 26இல் கண்டியில்

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச எதிர்வரும் 26

1,800 க்கு மேற்பட்ட வீரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தெரிவித்தார்.

முன்னர் தேசிய துணைப் படையில் கடமையாற்றியவர்களில் இருந்தே இந்த வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

1984 ஆம் ஆண்டு அமைக்கப் தற்போது படிப்படியாக கலைக்கப்பட்டு வருகிறது.

இந்தப் படையில் மொத்தம் 3,000 வீரர்கள் இருந்தனர். இவர்களில் சுமார் 1,000 பேர் ஏற்கனவே நிரந்தர இராணுவ படைப் பிரிவுகளிலும், இராணுவ தொண்டர் படைப் பிரிவுகளிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சுமார் 3,000 துணைப் படை காப்புக்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தற்போது அரச திணைக்களங்களின் பாதுகாப்புக்காக அரசு விசேட படைப் பிரிவு

[2ஆம் பக்கம் பார்க்க]

## இந்தியா திரும்புவோர் பற்றி ஜனாதிபதியுடன் ஏற்கனவே பேசிவிட்டேன்

**—தொண்டா**

கொழும்பு, மே 20

இந்தியாவுக்குத் திரும்பிச் செல்பவர்கள் பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசாவுடன் நான் பெப்ரவரி மாதத்திலேயே பேசி விட்டேன். இந்த விவகாரம் பேசித் தீர்க்கக் கூடிய விடயம். இதனை ஆலோசனை, பொதுக்கருத்து, இணக்கம் ஆகியன மூலம் செய்வதே சரி. இந்தியாவுக்கு திரும்பிச் செல்பவர்கள் பற்றி எவ்வித பிரச்சினையுமே இல்லை.

இப்படி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி, உல்லாசப் பயணத் துறை அமைச்சருமான திரு எஸ் தொண்டமான் கூறினார்.

அமைச்சர் திரு தொண்ட

[2ஆம் பக்கம் பார்க்க]

## சோமண்ணை



பிழைப்பில்லாமல் இருக்கிற மீனவர்களுக்கு இது வயிற்றிலை பாலை ஊத்தின மாதிரி இருக்கும் பாருங்கோ.

# கருத்தரங்கு கொழும்பில்

## ஜனாதிபதி ஆரம்பித்து வைக்கிறார்

கொழும்பு மே 20

தென்கிழக்காசிய இஸ்லாமிய சர்வதேச "த'ஃவா" கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை காலை கொழும்பில் ஆரம்பமாகிறது.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச இக்கருத்தரங்கை காலை 9-15 மணிக்கு அங்குரார்ப்பணம் செய்து வைப்பார்.

26 நாடுகளில் இருந்து 200 பேராளர்கள் இக்கருத்தரங்கில் பங்குபற்றுகிறார்கள்.

"நவீன சவால்களை முறி

[2ஆம் பக்கம் பார்க்க]

## ஜனாதிபதி 26இல் கண்டியில்

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை கண்டி மாவட்ட எம பிக்களையும் மாகாண சபை உறுப்பினர்களையும் அரச அதிகாரிகளையும் சந்தித்து

[2ஆம் பக்கம் பார்க்க]

## சாரணர் சமாதான செய்தி நாளை ஜனாதிபதியிடம்

கொழும்பு, மே 20

யாழ்ப்பாணத்திலும் மற்றும் பல இடங்களிலும் தாம் சேகரித்து வந்த சமாதானச் செய்திகளை சாரணர் குழு ஒன்று ஜனாதிபதியிடம் கைய

[2ஆம் பக்கம் பார்க்க]

## ஒரு வாரத்தில் மூன்று மோட்டார் வாகனங்கள் கண்டியில் கொள்ளை

### பெறுமதி 5 லட்சம் ரூபா

கண்டி மே 20

கண்டி நகரில் ஒரு வாரத்தில் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான மூன்று மோட்டார் வாகனங்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

கண்டி குடாரத்வத்தை மாவத்தையில் 12ஆம் திகதி இரவு 7-00 மணிக்கும் 9-30 மணிக்கும் இடையில் 28 ஸ்ரீ 4575 என்ற பிக்அப் வாகனம் ஒன்று கொள்ளையடிக்கப்பட்டது. இதன் பெறுமதி 80,000 ரூபா.

15ஆம் திகதி கண்டி வெடி

[2ஆம் பக்கம் பார்க்க]

## மா. சபையினரின் பாதயாத்திரை

கொழும்பு, மே 20

வடமத்திய மாகாண சபையின் ஐ சோ மு உறுப்பினர்கள் சமாதான பாத யாத்திரை ஒன்றை நடத்தினர். பாத யாத்திரை நேற்று மதவாச்சியிலிருந்து ஆரம்பித்து வவுனியாவைச் சென்றடைந்தது.

சுமார் 7000 பேர் இந்தப் பாத யாத்திரையில் கலந்து கொண்டனர்.

மாகாண சபையின் ஆளும் கட்சியினரின் ஒத்துழைப்புடன்

[2ஆம் பக்கம் பார்க்க]

## வடக்கு கிழக்கில் இன்று ஹர்த்தால் ஏன் என்று புலிகள் விளக்கம்

திருகோணமலை, மே 19

மலையக தமிழ் பேசும் மக்கள் மீது நடத்தப்படும் இராணுவ அடக்கு முறையை எதிர்த்து இன்று திங்கட்கிழமை வடக்கு, கிழக்கில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகிறது என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அறிவித்திருக்கிறது.

முன்னணியின் துண்டுப் பிரசுரம் ஒன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது—

மலையக தமிழ் பேசும் மக்களை இலங்கை அரசு ஒரு திட்டமிட்டசமாக நாடு கடத்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

[2ஆம் பக்கம் பார்க்க]

### தனிநபர் பிரேரணை கொண்டு வருவோம்

# 6ஆவது திருத்தத்தை நீக்க முடியாது போனால் பதவி ராஜினாமா

### ஈரோஸ் எம். பிக்கள் முடிவு

கொழும்பு, மே 20

ஆறாவது அரசமைப்புத் திருத்தத்தை நீக்குவதற்கு நாம் விரைவில் தனிநபர் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் கொண்டு வருவோம். அதை மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்ற முடியாமல் போனால் நாம் அனைவரும் நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறி விடுவோம். பதவியை ராஜினாமாச் செய்து விடுவோம். இதையே எமது மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இவ்வாறு ஈழவர் ஜனநாயக முன்னணியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு இ பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது—

"தமிழ் பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமையினை நசுக்கக் கூடிய 6ஆவது திருத்த அரசமைப்பில் இருந்து விலக்குப்படுவதன் மூலமே இந்நாட்டில் தமிழ்

[2ஆம் பக்கம் பார்க்க]

## மீன் உண்ணலாம் ஆபத்து இல்லை என்று கிழக்கில் அறிவுறுத்து

கல்முனை மே 19

கல்முனைப் பிரதேசத்தில் உள்ள கடல் மீன் மற்றும் ஆற்று மீன் வகைகளை உண்பதால் மக்களுக்கு எதுவித தாக்கமும் இல்லை. இது தொடர்பாக இப்பகுதி மக்கள் அஞ்சத் தேவையில்லை.

இவ்வாறு கல்முனைப் பகுதி சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

கல்முனை அக்கரைப்பற்று மருதமுனை ஆகிய பகுதிகளில் கடல் மீன் மற்றும் ஆற்று மீன் வகைகளுக்கு ஒருவித புழு நோய் பரவியிருப்பதால் அந்த மீன்வகைகளை உண்ணக் கூடாது

[2ஆம் பக்கம் பார்க்க]

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

# பசளை வகைகளின் விலை அதிகரிப்பு

கொழும்பு, மே 20

கடந்த மே மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் பசளை வகைகளின் விலை மீண்டும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் நெல்லுக்கும மரக்கறி வகைகளுக்கும இடப்படும பசளை வகைகளின் விலை அதிகரிக்கப்படவில்லை.

தேயிலை - றப்பர் போன்றவற்றுக்கு பயன்படுத்தப்படும பசளை வகைகளின் விலையே அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

இதன்படி தேயிலை றப்பர் போன்றவற்றுக்கு பயன்படுத்தப்படும பசளை ஒரு தொன்னின் விலை 50 ரூபா முதல் 100 ரூபா வரை அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

உரக் கூட்டுத்தாபனத்தின் பேச்சாளர் ஒருவர் தினபதிக்கு இதனை தெரிவித்தார்.

அரச காரிய கூட்டுத்தாபனத்தின் எப்பாவலை பொஸ்போட் தொழிற்சாலையில் பொஸ்போட்டின் விலை அதிகரிக்கப்பட்டிருப்பதாலேயே உள்ளூர் பசளை வகைகளின் விலையை அதிகரிக்க நேரிட்டது என்றும கூட்டுத்தாபன பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (உ—வ)

## 6 ஆவது திருத்...

[1ஆம பக்கத் தொடர்ச்சி]

பேசும மக்கள் சுதந்திரமாகவும, உரிமையுடனும வாழ முடியும.

ஆறாவது அரசமைப்புத் திருத்தம நாட்டில் குறிப்பாகத் தமிழ் மக்களையே வெகுவாகப் பாதிக்கிறது.

தற்போது ஆட்சியில் இருக்கும அரசு 1983 ஆம ஆண்டு இச்சட்டத்தை கொண்டு வந்த போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இச்சட்டத்தினை கண்டித்ததுடன் —

இது தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கும சட்டம என்றும கூறியது இங்கு நினைவு கூரத்தக்கதாகும.

நாம நாடாளுமன்றத்திற்கு போனதிலிருந்து கடந்த ஒரு வருட காலமாக ஆறாவது திருத்தத்தை அகற்றுமபடி அரசை வற்புறுத்தி வந்துள்ளோம.

இப்போது இந்தத் திருத்தம தொடர்பான பிரச்சினை நாட்டில் மீண்டும ஒரு போரை ஏற்படுத்தி விடுமோ என்று அஞ்ச வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

இச்சட்ட மூலத்தை நீக்காது விட்டால் ஏற்படவிருக்கும விளைவுகளுக்கு அரசே பொறுப்பேற்க வேண்டிவரும.

நாடாளுமன்றத்தில் தொடர்ந்தும முண்டு கொடுத்துக் கொண்டு கடந்த கால தலைவர்கள் விட்ட அதே தவறினை நாமும தொடர்ந்து விட தயாராக இல்லை.

எனவே தென் பகுதி அரசியல் கட்சி அங்கத்தவர்களும தமிழ் மக்களின் இப்பிரச்சினையை நன்குணர்ந்து ஒத்துழைப்பு நல்க வேண்டும.

இவ்வாறு திரு இளையதம்பி பரராஜசிங்கம தெரிவித்துள்ளார். (உ—ழ)

## இன்றைய திரைகளில்

இப்பொழுது காட்சியளிக்கிறது

முருகன்
(ஜிந்துப்பிட்டி)
2-15, 6-15, 9-15
சனி/ஞாயிறு 10-15

ஈரோஸ்
(பாமன்கடை)
2-30, 6-00, 9-30
சனி/ஞாயிறு 10-30

பயங்கர சண்டை காட்சிகள்
இனிமையான பாடல்கள்

## மன்னிப்பு சபை கடிதங்கள் ரஞ்சன் படிப்பதில்லை

கொழும்பு, மே 20

சர்வதேச மன்னிப்பு சபை உறுப்பினர்களினால் எழுதப்படும கடிதங்களை நான் வாசிப்பதே இல்லை.

கடித உறைகளில் உள்ள முத்திரைகளை மட்டும எடுத்துத் தருமபடி எனது பியோனிடம கூறி உள்ளேன். பல நாடுகளிலும இருந்து வரும அந்த முத்திரைகளை எனது மகனிடம கொடுத்து விடுவேன்.

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு ரஞ்சன் விஜேரத்ன இப்படிக் கூறினார்.

ஸ்ரீ ல சு கட்சி உறுப்பினர் திரு நிமல் சிறிபால டி சில்வாவுக்கும அமைச்சருக்கும இடையே சர்வதேச மன்னிப்புச் சபை தொடர்பாக எழுந்த சூடான வாக்குவாதத்தின் போதே அமைச்சர் இப்படிச் சொன்னார்.

நான் சர்வதேச மன்னிப்பு சபையின் முன் மண்டியிடப் போவதில்லை. எந்த ஒரு அமைப்புக்கும பயப்படப் போவதும இல்லை.

மேல் நாட்டு வெள்ளையர்கள் என்றால் மட்டும என்ன கடவுளின் வாரிசுகளா? சர்வதேச மன்னிப்பு சபையில் சர்வதேச பயங்கரவாதிகளும இருக்கின்றனர்.

இவ்வாறு அமைச்சர் விஜேரத்ன மேலும கூறினார். (ந—ய)

## வேலை நிறுத்...

[1ஆம பக்கத் தொடர்ச்சி]

ரேசன் கோயிலில் 20 பேர் உண்ணாவிரதம இருந்து வருகிறார்கள்.

இன்று திங்கட்கிழமை திரு சந்திரசேகரன் விடுவிக்கப்படுவார் என்று நினைக்கிறோம. திரு சந்திரசேகரன் விடுதலை செய்யப்படும வரை உண்ணாவிரதம இருப்போம.

இவ்வாறு அவர்கள் மேலும தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மலையக மக்கள் முன்னணியின் நிர்வாகச் செயலாளர் திரு எஸ் செல்லையா தெரிவித்ததாவது—

திரு சந்திரசேகரன் சனிக்கிழமை விடுதலை செய்யப்படுவார் என பொலீஸார் வழங்கிய உத்தரவாதத்தின் பேரில் ஏற்கனவே நடைபெற்ற வேலை நிறுத்தம கைவிடப்பட்டது.

அப்போதும உண்ணாவிரதம நடைபெற்று வந்தது. அப்போது இராணுவ காப்டன் ஒருவர் திரு சந்திரசேகரன் சனிக்கிழமை விடுதலை செய்யப்படுவதால் உண்ணாவிரதத்தை கைவிடுமாறு கேட்டுக் கொண்டார். அப்படி அவர் விடுதலை செய்யப்படாவிட்டால் உண்ணாவிரதத்தை மீண்டும தொடரலாம என்றும அவர் சொன்னார்.

## சம்பிரக்ஞ...

[1ஆம பக்கத் தொடர்ச்சி]

காலம உடல் நலம குன்றி இருந்தார்.

சுவாமி பிரக்ஞானானந்த இற்...

களும, பொதுமக்களும ஈமக் கிரியைகளில் கலந்து கொண்டனர்.

## வடக்கு கிழக்கில்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

அதனை எதிர்ப்போரையும அடக்க முயல்கிறது.

மலையகத்தில் இளைஞர்கள் பலர் காணாமற் போயுள்ளனர். பலர் கடத்தப்பட்டும கொலை செய்யப்பட்டும உள்ளனர்.

1948 ஆம ஆண்டுப் பகுதியில் அங்க ...க்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது.

தற்போது அவர்கள் கிட்ட ...டு தாக்கப்பட்டு வருகிறார்கள். இருந்த இடத்திலிருந்து ...டப்பட்டும வருகிறார்கள்.

இவற்றை ... ஒரு ... சமாதான ... பேசிக் கொண்டு ... நடைமுறைகள் ... கடத்தல்கள், விசாரணைகள் ... கொலைகள் ஆகியவற்றை ... வருகிறது.

இவற்றை எதிர்த்தே இன்று ...த்தால் அனுஷ்டிக்கப்படுகிறது.

இப்... அந்த ... பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ—ற—287)

## இன்று...!

[1ஆம பக்கத் தொடர்ச்சி]

யடிப்பதில் இஸ்லாமிய தஃவாவின் பங்கு" பற்றிய தலைப்பில் இக்கருத்தரங்கு நடைபெறும.

கொழும்பு கோட்டையில் இருந்து வெளிநாட்டுப் பேராளர்கள் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்துக்கு மோட்டார் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவர்.

உள்ளூரில் இருந்தும பேராளர்கள் இக்கருத்தரங்கில் பங்குபற்றுவர்.

பார்வையாளர்களாகக் கலந்து கொள்ள சுமார் இரண்டாயிரம பேருக்கு அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

அங்குரார்ப்பண அமர்வைத் தொடர்ந்து வேலைக்களமும 28ஆம திகதி வரை நடைபெறும. [உ—007]

## மீனை உண்...

[1ஆம பக்கத் தொடர்ச்சி]

என மக்கள் அறிவுறுத்தப்பட்டிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து அம்பாறை மாவட்ட உணவு, மருந்து கட்டுப்பாட்டுப் பரிசோதகர் திரு என் நாகலிங்கம தலைமையிலான குழுவினர் மீன் வகைகளின் சில சாமபிள்களை அதாவது மாதிரிகளை இரசாயன பகுப்பாய்வுக்காகக் கொழும்புக்கு எடுத்துச் சென்றனர்.

## சாரணர்...

[1ஆம பக்கத் தொடர்ச்சி]

ளிக்கும.

தேசிய வீரர்கள் தினமான நாளை 22 ஆம திகதி இந்தச் சாரணர்கள் சமாதானச் செய்திகளை ஜனாதிபதியிடம கையளிப்பர்.

கிளிநொச்சி மாவட்ட பளை மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பத்துப் பேர் கொண்ட ஒரு சாரணர் குழு தற்போது சமாதான யாத்திரை மேற்கொண்டு கொழும்பு வந்து சேர்ந்துள்ளது.

குழுத் தலைவரும சாரண ஆசிரியருமான மா புவனேந்திரன் தலைமையிலான இக் குழுவில் க சுந்தரலிங்கம், ஜனாதிபதி சாரணர்களான கி விக்னேஸ்வரன் பு பவானந்தன் மற்றும சாரணர்களான கு விக்னேஸ்வரன் பு காண்டீபன் மு சித்திரவேல் க ரவீந்திரன் கு தாரணா க நந்தகுமார் ஆகியோர் இடம பெறுவர்.

இவர்களே ஜனாதிபதியிடம சமாதான செய்திகளைக் கையளிப்பர். [உ—077]

## தோட்ட...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

ன்றை அமைத்து வருகிறது.

இங்குப் பிரிவு இலங்கை இராணுவத்தின் ...மாக தோட்டப் பகுதிகளிலும, ஏனைய முக்கிய இடங்களிலும சேவையில் ஈடுபடுத்தப்படும.

1,500 முன்னாள் தரைப் படை வீரர்கள் விரைவில் இராணுவத்தில் சேர்க்கப்படுவர் என ஜெனரல் வனசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, தோட்ட பாதுகாப்புச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தரைப் படை வீரர்களை வாபஸ் பெற வேண்டாம என எதிர்க்கட்சி ... கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக தேசிய பாதுகாப்புச் சபை ஆராயவிருப்பதாக பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்தார்.

பயிற்சிப் பிரிவு லெப்டினன்ட் ஜெனரல் வேரகமவின் கீழ் ... (உ—ற)

## மா சபை...

[1ஆம பக்கத் தொடர்ச்சி]

ஏற்பாடு செய்யப்பட்ட இப்பாத யாத்திரையில் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் திரு சந்திரா பண்டார உட்பட மாகாண சபை உறுப்பினர்கள் பலரும கலந்து கொண்டனர்.

மதவாச்சியில் இருந்து வவுனியா வரையிலான பாத யாத்திரையின் போது சகல அரசாங்கக் கட்டிடங்களிலும் வீடு...

## ஜனாதிபதி...

[1ஆம பக்கத் தொடர்ச்சி]

உரையாற்ற இருக்கிறார்.

இந்தச் சந்திப்பு கண்டி திரித்துவக் கல்லூரி மண்டபத்தில் அன்றையதினம் முற்பகல் 9-00 மணிக்கு நடைபெறும.

அரசாங்கத்தின் அபிவிருத்திப் பணிகள் குறித்து விளக்கம அளிக்கும பொருட்டு இந்தக் கூட்டம நடைபெறவுள்ளது. [உ—017]

## திருமலை...

[1ஆம பக்கத் தொடர்ச்சி]

னக்கோன் பொலீஸ் சுப்ரிண்டன் சந்திரா பெர்னாண்டோ பிரதி பொலீஸ் மா அதிபர் திரு ப ஆனந்தராஜா ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

திருகோணமலையில் பதற்ற நிலைமை தொடர்பாக இரு சாராரும மனம் விட்டுக் கலந்துரையாடியதாகத் தெரியவந்தது. [உ—ற]


நைசை ஆணை
சமபந்த அறிவித்தல்

கண்டி மாவட்ட நீதிமன்றத்தில்

அக்குறணை புளுகொஹொதென்னயில் வசித்து காலஞ்சென்ற தேசகுருன்ஞன்சலாகெதர மொஹமட் லெவ்வை நெய்னா மொஹமட் என்பவரின் மரண சாசனம எழுதப்படாத சொத்து சமபந்தமான விடயம.

காலஞ்சென்றவர்
தேச குருஞன்செலாகெதர மொஹமட் லெப்பை நெய்னா மொஹமட் உடைய மகன் சாஹிர் புளுகொஹொதன்னே, அக்குறணை.

மனுதாரர்

இலக்கம ரி 3468

மற்றும

1 நெய்னா மொஹமட் அப்துல் காதர்
2 நெய்னா மொஹமட் கய்ருன் நிசா
3 நெய்னா மொஹமட் சித்தி பலீலா அல்லது பத்ருந்நிசா
4 நெய்னா மொஹமட் கதிஜா உம்மா- யாவரும வசியுமிடம புளுகொஹொதென்ன அக்குறணை.
5 நாகஹதெனியே கெதர மொஹமட் லெப்பை பாத்துமுத்து பவுசியா "றைச்மில்" அக்குறணை.

பிரதிவாதிகள்

(பாமன்கடை)
2-30, 6-00, 9-30
சனி/ஞாயிறு 10-30

பயங்கர சண்டை காட்சிகள்
இனிமையான பாடல்கள்
நிறைந்த சித்திரம்
அர்ஜுன் — சசிகலா
சீதா — செந்தில்
பேபி ஷாலினி — சரத்பாபு
நடித்த

**சங்கர் குரு**

(கலர்)

---

6 வது வாரம்

மனுநீதி
[கிராண்ட்பாஸ்]
2-00, 6-00, 9-30

கொன்கோட்
தெஹிவளை
10-30, 2-00, 6-00, 9-00

வின்சர்
[யாழ்நகர்]
10-30, 2-30, 6-00

பாக்யராஜ் — ஷோபனா
சோமயாஜுலு — மனோரமா
குமரிமுத்து நடித்த

**இது நம்ம ஆளு**

[கலர்]

---

7 வது வாரம்

சமந்தா
(தெமட்டகொடை)
10-00, 2-00, 6-00, 9-30

பிரின்ஸ்
(ஹட்டன்)
2-30, 6-00
சனி/ஞாயிறு 10-30

ஸ்ரீதர்
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-30

ரஜனிகாந்த் — ராதிகா
நடித்த
சத்யா மூவிஸ்

**ஊர்க்காவலன்**

(கலர்)

---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
காலம் உடல் நலம் குன்றி இருந்தார்-

சுவாமி பிரக்ஞானானந்த இந்தியாவின் கன்னட மாநிலத்தைச் சேர்ந்தவர்- இந்தியாவிலும், இலங்கையிலும் தமது அரும் பணியால் அனைவரது அன்புக்கும், அபிமானத்துக்கும் பாத்திரமானவர்-

சுவாமியின் ஈமக் கிரியைகள் மிகவும் எளிமையான முறையில் நடைபெற்றன-

இந்து சமய, கலாசார ராஜாங்க அமைச்சர் திரு பி பி தேவராஜ், முஸ்லிம் சமய கலாசார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ எச் எம் அஸ்வர், ஜனாதிபதியின் அந்தரங்கச் செயலாளர் திரு எப் டி பால சூரியா உட்படப் பல அரசியல் தலைவர்களும், சமயப் பெரியார்களும், சமூகத் தொண்டர்களும், பொதுமக்களும் ஈமக் கிரியைகளில் கலந்து கொண்டனர்-

## அஸ்வர் அனுதாபம்

அமைதி காத்து, அன்பு செலுத்தி அனைவரின் நல்வாழ்வுக்கும் வழி அமைக்கும் அருட்பணியில் தம்மை முழுக்க முழுக்க ஈடுபடுத்திக் கொண்டவர் சுவாமி சமபிரக் ஞானானந்த-

இப்படி முஸ்லிம் சமய, கலாசார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ எச் எம் அஸ்வர் தமது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்-

சுவாமி பிரக்ஞானானந்த எளிமையாக வாழ்ந்து இனிமையாகப் பேசி அரும்பணியாற்றியதால் அனைவராலும் விரும்பப்பட்டவர், மதிக்கப்பட்டவர்- அவருடைய ஈமக் கிரியைகளும் எளிமையாகவே நடைபெற்றன-

சுவாமி சமாதியாகி 24 மணித்தியாலத்துக்குள் இறுதிக் கிரியைகள் நடந்து முடிவடைந்தமை என் மனதை பெரிதும் தொட்டது என்று அமைச்சர் தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்-

(உ-007)

---

# இந்தியா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
மான் இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது—

ஒரு லட்சம் பேர் சம்பந்தப்பட்ட இந்த விவகாரம் ஒரு பிரச்சினையே அல்ல. ஒரு சிலர் இதனை தமக்குச் சாதகமாக பயன்படுத்தப் பார்க்கிறார்கள் போலத் தெரிகிறது.

இப்பிரச்சினையை பேசிச் சுலபமாகத் தீர்த்து விடலாம். ஜனாதிபதியும் இக்கருத்தையே கொண்டிருக்கிறார்,

கைது செய்யப்படுபவர் விசாரணை முடிவுற்றதும் உடனடியாக நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட வேண்டும். இப்படி நாம் வற்புறுத்தி வந்திருக்கிறோம்.

எவரும் எவரையும் கால வரையறை இன்றி தடுத்து வைத்திருக்கமுடியாது. திரு சந்திரசேகரத்தை மட்டுமல்ல, எந்தத் தொழிலாளிக்கும் இதே உரிமை உண்டு.

இப்படி அமைச்சர் திரு தொண்டமான் கூறினார்.

(ண)

---

# ஒரு வாரத்தில்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
தோர்டன் மாவத்தையில் அதிகாலை 20 ஸ்ரீ 2887 என்ற இலக்கம் கொண்ட வான் ஒன்று கொள்ளையடிக்கப்பட்டது- இதன் பெறுமதி 2,25,000 ரூபாயாகும்-

17ஆம் திகதி மாலை கண்டி போகம்பறை மைதானத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 10 ஸ்ரீ 9641 என்ற டொயாட்டா கொரெல்லா என்ற காரும் கொள்ளையடிக்கப்பட்டு உள்ளது- இதன் பெறுமதி 1,75,00 ரூபா என கண்டி பொலீஸார் தெரிவித்தனர்- இம் மூன்று வாகனங்களும் இன்னும் மீட்கப்படவில்லை-

[உ—017]

---

அவர் விடுதலை செய்யப்படாவிட்டால் உண்ணாவிரதத்தை மீண்டும் தொடரலாம் என்றும் அவர் சொன்னார்.

சனிக்கிழமை திரு சந்திரசேகரன் விடுதலை செய்யப்படாததால் உண்ணாவிரதம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

இப்படி திரு எஸ் செல்லையா தெரிவித்தார்.

(உ-ற-ழ-400)

---

வகைகளின் சில சாம்பிள்களை அதாவது மாதிரிகளை இரசாயன பகுப்பாய்வுக்காகக் கொழும்புக்கு எடுத்துச் சென்றனர்-

இந்நோயினால் பொது மக்கள் பாதிக்கப்பட மாட்டார்கள் என பகுப்பாய்வின் முடிவில் இருந்து தெரியவந்துள்ளது-

அதனைத் தொடர்ந்தே கல்முனைப் பகுதி சுகாதார வைத்திய அதிகாரிகள் (எம் ஓ எச்)

---

கலந்து கொண்டனர்-

மதவாச்சியில் இருந்து வவுனியா வரையிலான பாத யாத்திரையின் போது சகல அரசாங்கக் கட்டிடங்களிலும் வீடுகளிலும் தேசியக் கொடி ஏற்றப்பட்டிருந்தது- [உ—ழ—ற]

மீன் சந்தைகளுக்குச் சென்று "மீனை உண்பதால் பாதிப்பு இல்லை- தைரியமாக உண்ணலாம்" என அறிவுறுத்தி வருகின்றனர்- [உ—ழ—281]

---


# இப்பொழுது பெறலாம்!

குணசேன
# ஆங்கில-தமிழ்
## சுருக்க அகராதி

ஆக்கியோன் - எஸ் நடராசா

**விலை ரூ. 190.00**

பாடசாலை மாணவர்களுக்கும் காரியாலயப் பயன்பாட்டுக்கும் மிகச் சிறந்த அகராதி
உங்கள் தேவைக்கு உடனே
எழுதுங்கள் அல்லது நேரில் வாருங்கள்




# எம். டி. குணசேன
## அன்ட். கம். லிமிட்.

217- ஒல்கொட் மாவத்தை
கொழும்பு—11

கிளைகள்— கொள்ளுப்பிட்டிய- களுத்துறை- காலி- மாத்தறை- கண்டி- குருநாகல்- நீர்கொழும்பு

புகையிரத புத்தகசாலை— மருதானை- பொல்காவலை- கண்டி- காலி- மாத்தறை- அனுராதபுரம்


---

கெதர மொஹம்மட் லெப்பை பாத்துமுத்து பவுசியா "றைச்மில்" அக்குறணை-

பிரதிவாதிகள்

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் சொத்தை நிர்வாகிப்பதற்காக மேற்குறிப்பிடப்பட்ட இலக்கம் கொண்ட வழக்கு மேற்படி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இருக்கின்றது என்பதும் அதற்கு இணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டு இருக்கின்றது என்பதும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது-

சம்பந்தப்பட்ட எவரும் 1990 மே மாதம் 24 ஆம் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன் தோன்றி பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முறையான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கான காரணங்களைக் காட்டுமாறு இத்தால் கோரப்படுகிறார்கள்-

நீதிமன்றத்தின் கட்டளைப்படி
(ஒப்பம்) ஏ வி எம் பாச்சா
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம் கண்டி.
திகதி- 1990 மார்ச் 9

வி இ 032405

---

**தினபதி**
**சிறு விளம்பரம்**

---

## காணவில்லை

அப்துல் கப்பார் அவர்களின் மகன் அமின் கப்பார் ஆகிய எனது பாக்கிஸ்தான் பாஸ்போட் மற்றும் விமான டிக்கட்டும் காணாமல் போய் விட்டன. கண்டெடுத்துத் தருபவருக்கு ரூ 1000/- வழங்குவேன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும், பியூட்டி சென்டர், 107, கெய்ஸர் வீதி, கொழும்பு-11 தொலைபேசி: 29014.

வி இ 028833

# "மேட்டுப் பட்டி மிராசு"வில் முராரியின் இசை

ஏவி எ.ம் படப்பிடிப்பு நிலையத்தின் கம்பியூட்டர் ஒலிப்பதிவு கூடத்தில் சர்மிளா மூவீஸ் பிரமாண்ட படைப்பாக உருவாக்கும் "மேட்டுப்பட்டி மிராசு" படத் தொடக்க விழா கோலாகலமாக நடந்தது—

இந்தப் படத்தில் மிராசுகளாக அண்ணன் — தம்பி வேடமேற்று நடிக்கும் சிவகுமார் — அர்ஜுன், கதாநாயகி ராதிகா, கதை திரைக்கதை வசனம் தீட்டி இயக்கும் அனுமோகன், தயாரிப்பு பொறுப்பாளர் அப்புசாமி, அவருடைய நண்பர்கள், உறவினர்கள், திரையுலகப் பிரமுகர்கள் என திரண்டு வந்த வாழ்த்து விழாவும் இனிதாக நடைபெற்ற அடுத்த நிமிடமே "மேட்டுப்பட்டி மிராசு"வின் பாடல் ஒலிப்பதிவும தொடங்கியது—

படத்தின் இசை அமைப்பாளர் இளைஞர். இசை ஞானம் ஒளி விடும் தெளிவான பார்வை கொண்ட அந்த இளைஞர் முராரி. இந்த முராரி நேற்று



முராரி

வந்து இன்று இசை அமைக்க வந்தவர் அல்லர்—

"முரளியூபோனி" என்ற மெல்லிசைக் குழுவை ஏற்படுத்தி சென்னை, மலேசியா மற்றும் தமிழகம் எங்கும சுற்றி வந்து இசை நிகழ்ச்சி நடத்தி புகழ், பெயர் ஈட்டியவர்— "சோலைக்குயில்" என்ற படமே இவர் இசை அமைத்த முதல் படம்—

விரைவில் திரைக்கு வரும் "மலைச்சாரல்" என்ற படத்தின் இசை அமைப்பும் இவரே—

"மேட்டுப்பட்டி மிராசு" ஒலிப்பதிவு தொடங்குவதற்குள் சிறிது நேரம் நிருபரிடம் உரையாடினார் முராரி.

"உடுமலைப் பேட்டையை சேர்ந்த நான் மதுரை பல்கலைக் கழகத்தில் இசைத்துறையில் பட்டம் பெற்றது, எனது திரையுலகப் பிரவேசம் தொடங்கியது—

எல்லா பிரபல இசை அமைப்பாளர்களிடமும் பணியாற்றி இருக்கிறேன்— முக்கியமாக மின்சார அலைகள் மூலம் பல நூற வித விதமான ஒலிகளை எழுப்பும் "சிந்தசைசர்" என்ற கருவியை மீட்டி வந்தேன்—

இசைக் கருவிகளை மீட்டும் நுட்பங்களையும எந்த எந்தக் காட்சிகளுக்கு எப்படி எந்த இசைக் கருவிகளைப் பயன்படுத்தி இசை அமைப்பது என்பதையும தெரிந்திருந்தால்தான் திரைப் படத்துக்கு இசை அமைக்க முடியும—


"சோலைக்குயில்" படம் மூலமே இசை அமைப்பாளனாக அறிமுகமானதால் ஓரிரு இசை அமைப்பாளர்களிடம் பணியாற்றிக் கொண்டிருந்த வாய்ப்பும நழுவியது.

வாழ்க்கைச் செலவுக்கான வருமானமும பாதிக்கப்பட்டது— ஆனாலும் மனம் தளரவில்லை. இசைத்துறையில் கற்றதையும பெற்ற பயிற்சியையும் மூலதனமாகக் கொண்டு நல்லவர்கள் ஆதரவுடன் இசை அமைப்பாளனாக இருக்கிறேன்.

"மேட்டுப்பட்டி மிராசு" உச்சி மேட்டுக்கு உயர்த்தும் என்ற நம்பிக்கையுடன் உழைக்கிறேன்!"

இவ்வாறு முராரி கூறினார்—

[இ—10]



காதோரம செய்தி சொல்லுற கண்ணனுக்கு கன்னத்தில் முத்தமொன்ற பதித்து, காதல் வெள்ளோட்டம விட தெரியவில்லையே என்று தான் கண்மணி காதை பொத்திக் கொண்டாளோ—

(ரகுமான்—சித்தாரா) [படம்:— மனைவி வந்த நேரம]

## ரகுமானை இரக்கப்பட்டு காதலிக்கிறார் குஷ்பூ

## வருங்காலம் நல்ல காலம்

"வருங்காலம நல்ல காலம வருந்தாதே ஏழைத் தோழா..." என்ற பாடல் பதிவுடன் ராமராஜன் ரூபினி நடிக்கும கவி பாரதி கிரியேசன்ஸ் "மில் தொழிலாளி" வளரத் தவங்கி

வெளிநாட்டு உதவியுடன்

# வடக்கு கிழக்கு: தொலைபேசி சேவை சர்வதேச தரத்திற்கு

திருகோணமலை, மே 19

வடக்கு கிழக்கின் தொலைபேசித் தொடர்புகள் வெளிநாட்டு உதவியுடன் சர்வதேசத் தரத்துக்கு விரைவில் உயர்த்தப்படும—

வடக்கு கிழக்கு தொலைத் தொடர்பு பொறியியல் அதிகாரி திரு கனகசூரியம் மேற்கண்டதகவலைத் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு பாரிய தொலைபேசித் திட்டமொன்று டென்மார்க், சுவீடிஷ் அரச உதவியுடன் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

மேற்படி திட்டம் சம்பந்தமாக நேரில் பார்வையிடுவதற்காக காப்பரோ சர்வதேசக் குழுவினர் இலங்கை வந்துள்ளனர்

இக்குழுவினர் மேற்படி திட்டம பற்றி ஆராய்வதற்காக யாழ்ப்பாணம சென்ற விட்டு திருமலைக்கு வந்துள்ளனர்—

இத்திட்டம் நிறைவேற்றப்படும் பட்சத்தில் உள்ளூர் தொலைத் தொடர்புகள் மாத்திரமன்றி வடக்கு கிழக்கிலிருந்து வெளிநாடுகளுக்கும நேரடியாக தொடர்பு கொள்ளக் கூடியதாக இருக்கும.

நாட்டில் தொடர்ந்து சமுக நிலை இருக்குமானால் இத்திட்டம் 1992 ஆம் ஆண்டில் தொடக்கி வைக்கப்படுமென்றும திரு கனகசூரியர் தெரிவித்தார்—

[இ—287]

## கூட்டுறவுத்துறை ஊழியர்: ஊக்குவிப்பு பணம் வழங்க வில்லையாம்!

### சங்கபணியாளர் ஒன்றியம் கண்டனம்

தமபலகாமம, மே 19

கூட்டுறவுத்துறை ஊழியர்களுக்கு ஊக்குவிப்புப் பணம வழங்குவதில் அக்கறை காட்டாமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும—

திருகோணமலை மாவட்ட கூட்டுறவுச் சங்க பணியாளர் ஒன்றியம இவ்வாறு கண்டனம தெரிவித்துள்ளது—

இவ்வொன்றியத்தின் செயலாளர் திரு த பாலகங்காதரன் இதுபற்றிக் கூறுகையில்,

1983 ஆம ஆண்டில் இருந்த திருமலை மாவட்டத்தில் கூட்டுறவுச் சேவையை ஆற்றுவதற்கு சொல்லொண்ணா துன்பங்களை அனுபவித்தோம—

கூட்டுறவுச் சேவையின் போதே எமது சங்க ஊழியர் பலரை நாம பறிகொடுத்துள்ளோம—

அப்படி பல்வேறு இன்னல்களையும துன்பங்களையும அனுபவித்து, கூட்டுறவுச் சேவையை ஆற்றிவரும எமக்கு இதுவரை ஊக்குவிப்புப் பணம வழங்கப்படவில்லை—

இது சேவை மனப்பான்மையுள்ள கூட்டுறவு ஊழியர்களின் மனநிலையைப் பாதிக்கும விடயமாகும—

எனவே, மேற்படி ஊழியர்களுக்கு இவ் ஊக்குவிப்புப் பணத்தை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும என்றார்—

[இ—287]

## கல்வி அபிவிருத்திக்கு அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்

### பொருளாதார அபி. சங்க உபதலைவர்

கொழும்பு, மே 20

கல்வி அபிவிருத்திக்காக அனைத்துப் பிரிவினரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும—

சமூக சேவையாளரும, கல்வி பொருளாதார அபிவிருத்திச் சங்கத்தின் உப தலைவருமான ஜனாப் எம எச் எம இப்றாஹிம இவ்வாறு கூறினார்—

இச் சங்கத்தின் கூட்டம மத் சங்கத்தின் சிரேஷ்ட உப தலைவருமான ஜனாப் ஏ ஆர் எம நளீம கருத்துரை வழங்குகையில்,

சமூகமொன்றின் நிலையான அபிவிருத்தி அதன் கல்வி முன்னேறத்திலேயே தங்கியிருக்கிறது— எனவே சமூக கல்வி உயர்வுக்காக எல்லோரும திட்டமிட்டுச் செயலாற்றித் தியாக உணர்


## ஹஜ் யாத்திரை

ஹஜ்ஜாஜிகளுக்கு ஊழியம செய்வதற்காக ஹஜ் குழுவை கொண்டு செல்கிறோம. அதற்காக சகல சௌகரியங்களும உள்ளடக்கிய குறைந்த கட்டணம அறவிடுகின்றோம—

* சவூதி வீசா, * மக்கா, மதீனா ஹரம அண்மையில் ஏ/சி தங்குமிட வசதி, * குளிரூட்டப்பட்ட போக்குவரத்து, * உணவு * மருத்துவ வசதிகள், * புனித ஸ்தலங்களை தரிசித்தல், * மௌலவி வழிகாட்டல் சேவை, * மினா அரபாத் சேவை.

தொடர்பு கொள்ளவும—

ஹாஜி அப்துல் கனி தொலைபேசி— 447076

ஹாஜி எம ஐ ஆதமபிள்ளை

அறக்கியாலை, கெக்குணகொல்லை

### மதீனா நூரி டிரவல்

29, 2 ஆம மாடி, 3 ஆம் குறுக்குத் தெரு, கொழும்பு—11. தொலைபேசி— 447076

(முஸ்லிம அமைச்சினால் அனுமதிக்கப்பட்டது)

## இரக்கப்பட்டு

### காதலிக்கிறார் குஷ்பூ

ரகுமான் ஒரு கல்லூரி மாணவர்- அதே கல்லூரியில் படிக்கும் மாணவி குஷ்பூ அவரை உயிருக்கும் மேலாக நேசிக்கிறார் ரகுமான் எந்த நேரத்திலும் குஷ்பூவின் நினைவாகவே இருக்கிறார்-

ஆனால் குஷ்பூவோ அதைக் கொஞ்சமும் கண்டுகொள்ளவே இல்லை- ரகுமான் தன்னைப் பின்தொடரும் நேரமெல்லாம் அவரைத் துச்சமாக தூக்கி எறிகிறார் குஷ்பூ-

இருப்பினும் ரகுமான் மனம் தளரவே இல்லை- ஒரு நாள் இரவு நேரம் குஷ்பூவைச் சந்திக்க வேண்டும் என்று அவர் வீடு தேடிப் போகிறார் ரகுமான். குழாய் வழியாக ஏறி மாடிக்குச் செல்கிறார்- அங்கு அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த குஷ்பூ ரகுமானைப் பார்த்ததும் சத்தம் போடுகிறார்-

ரகுமானோ கத்தி ஒன்றை எடுத்துக் கையில் கிறிக் கொள்கிறார்- ரத்தம் கொட்டுகிறது- "நீ என்னைக் காதலிக்கலைன்னா, இப்படியே உடலில் கிறி செத்துடுவேன்" என்கிறார் ரகுமான்-

குஷ்பூ மனம் இரங்கி ரகுமானைக் காதலிக்க சம்மதிக்கிறார்-

இப்படி ஒரு காட்சி கோல்டன் குரூப் தயாரிக்கும் "நம நாட்டு ராஜாக்கள்" படத்தில் வருகிறது-

ரகுமான், குஷ்பூ, பானுசந்தர், நரேஷ், சுதாகர், ராஜேஷ், ஜெயசித்ரா, துளசி, டிஸ்கோ சாந்தி நடிக்கும் இப்படத்தின் பாடல்களை வைரமுத்து எழுத, வித்யாசாகர் இசை அமைக்கிறார் ஒளிப்பதிவு கபீர்லால்-

(வ-10)

"வருங்காலம நல்ல காலம வருந்தாதே ஏழைத் தோழா..." என்ற பாடல் பதிவுடன் ராமராஜன் ரூபினி நடிக்கும கவி பாரதி கிரியேசன்ஸ் "மில் தொழிலாளி" வளரத் துவங்கினான்- கவிஞர் காளிதாசனின் இந்தப் பாட்டுக்கு இசை அமைத்தவர் தேவா-

விஜயமுரளி, எஸ் செல்வி பிபாண்டியன் தயாரிக்கும இதன் கதை, வசனத்தை ஐ என் எஸ் ரவி எழுத, ஏ ஜெகன்னாதன் இயக்குகிறார்- சுலக்ஷனா, ராஜீவ், செந்தில் ஆகியோரும நடிக்கிறார்கள்-

[இ-10]

## தினபதி சினிமா

### பௌர்ணமி ரோஜாக்கள்

ஸ்ரீஅமர் பிலிம்ஸ் "பௌர்ணமி ரோஜாக்கள்" திகில் படத்தில் மோகன்குமார் கதாநாயகனாக நடிக்க ஒப்பந்தமாகி உள்ளார்- அவருக்கு ஜோடியாக புதுமுகம தாரணி அறிமுகமாகிறார்-

கோபிச் செட்டிபாளையத்தில் படப்பிடிப்புத் துவங்க இருக்கும இதில் ஜெய்சங்கர், விஸ்வம, சிரவந்தி, கல்பனா ஆகியோரு நடிக்கிறார்கள்-

வேணுகாரந்தூர் ஒளிப்பதிவைக் கவனிக்க, இளையராஜா இசை அமைக்க, கதை, வசனம எழுதி இயக்குகிறார் பாரதிசந்தர்-

[இ-10]

## திவ்யா காதலுக்கு தந்தை எதிர்ப்பு

நிலா முகம்... நீல விழிகள்... பலாச்சுளைப் பேச்சு... பனிப் பார்வை... தென்னம்பாளைச் சிரிப்பு... அழகு தேரோடும மேனிக்கு சிவப்பு...

திவ்யா இருக்கும் திசையே முரளிகிருஷ்ணாவுக்கு (எஸ் ஜானகி மகன்) சொர்க்க பூமி... தினம் தினம் தனிமைச் சந்திப்புகள். பகலிலும் இன்பக் கனவுகள்.

காதல் பயணத்தின் குறுக்கே சிவப்புக்கொடி. கண்ணான மகள் காதலுக்கு தந்தையே எதிரி- திவ்யா - முரளி காதல் கனிந்ததா?

கருணாநிதி கதை வசனம் எழுதி இயக்கும தாழமுத்தம்மன் பிக்சர்ஸ் "அதிகாலை சுபவேளை" பதில் சொல்லும்-

சங்கர் ஒளிப்பதிவு செய்ய, தேவா இசை அமைக்கும் இதில் சரத்பாபு, சந்திரசேகர், செந்தில், கோவை சரளா, ஸ்ரீகௌரி ஆகியோரும் நடிக்கிறார்கள்-

[இ—10]

சமூக சேவையாளரும, கல்வி பொருளாதார அபிவிருத்திச் சங்கத்தின் உப தலைவருமான ஜனாப் எம எச் எம இப்றாஹிம இவ்வாறு கூறினார்-

இச் சங்கத்தின் கூட்டம மத்திய நிர்வாகக் குழு உறுப்பினர் ஜனாப் எம எஸ் எச் எம அமீரின் இல்லத்தில் அண்மையில் நடைபெற்றது-

தவிசாளர் ஜனாப் எம எஸ் எம சிபர் (ஆசிரியர்) தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் மேலும கூறியதாவது:-

சமூகம எமது பிள்ளைகளின் குறைகளைக் கண்டு தேவைகளை நிறைவு செய்ய வேண்டியது அவசியமானதாகும-

சமூகமொன்றின் நிலையான அபிவிருத்தி அதன் கல்வி முன்னேறத்திலேயே தங்கியிருக்கிறது- எனவே சமூக கல்வி உயர்வுக்காக எல்லோரும திட்டமிட்டுச் செயலாற்றித் தியாக உணர்வுடன் உழைக்க வேண்டும என்றார்-

ஜனாப் எம எச் எம அமீர், அல்ஹாஜ் ஏ எஸ் எம இக்றாம, ஜனாப் எம ரி எம சஹீத் கிராம சேவை அதிகாரி, ஏ எச் எம பிஸ்தாமி, எஸ் எச் எம முக்தார், ஏ எஸ் எம சமமூன், எம ஐ எம நளீம, ஏ எஸ் எம வாசிர், எம எஸ் ஏ ஜெப்பார் எம ரி எம உனைஸ் ஆகியோரும கருத்துரை வழங்கினர்-

[இ-வ]

## பஸ் பள்ளத்தில் விழுந்து ஒருவர் பலி

### 20 பேர் படுகாயம்

ஹேவாஹெட்ட, மே 19 ரிகல்லகஸ்கட எனும இடத்திலிருந்து கண்டி நோக்கிச் சென்ற தனியார் பஸ் ஒன்று உடுதெனிய கந்தஹந்திய பாதையை விட்டு விலகி (மேட்டிலிருந்து சுமார் 150 அடி) பள்ளத்தில் விழுந்தது- இதனால் ஒருவர் மரணமானதுடன் 20 பேர் படுகாயமடைந்தனர்- இச் சம்பவம கடந்த செவ்வாய்க்கிழமை நடந்தது-

இயந்திரக் கோளாறு காரணமாகவே இந்த விபத்து நிகழ்ந்தது எனக் கூறப்படுகிறது-

இந்த விபத்தின் போது படுகாயமடைந்தோரில் மூவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாகத் தெரிய வருகிறது-

விபத்துக்கு உள்ளானவர்கள் மாரஸ்ஸன அரசினர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்- இவர்களில் பலர் இப்போது கண்டி பெரியாஸ்பத்திரிக்கு இடமாற்றப்பட்டுள்ளனர்-

கெலிகோட்டைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு வியாபாரியே விபத்து நடந்த இடத்திலேயே மரணமானவராவார்-

இவ் விபத்து சம்பந்தமான விசாரணைகள் தற்சமயம நடைபெற்று வருகின்றன-

[இ-099]

## ஜே. வி. பி. தென்பகுதி தலைவரின் சடலம் கண்டெடுப்பு

மக்கள் விடுதலை முன்னணி (ஜே வி பி) யின் தென் பிராந்தியத் தலைவர் எனக் கூறப்படும் கலகம சுனில் ஏக்கநாயக்க என்பவரின் சடலம திக்வெல்ல பொலீஸாரினால் கண்டெடுக்கப்பட்டது-

உதுகமுவ பகுதியில் சடலம கண்டெடுக்கப்பட்டது-

[ந—ர]

29, 2 ஆம மாடி, 3 ஆம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11. தொலைபேசி- 447076
(முஸ்லிம அமைச்சினால் அனுமதிக்கப்பட்டது)

புனித

ஹஜ் யாத்திரை-1990

எங்களுடைய முழுச் செலவு

ரூபா 57,400/- மட்டுமே

மௌலவி

அபுல் ஹஸன் (பஹ்ஜி)

மௌலவி

அப்துல் சலாம் (கபூரி)

மௌலவி முகம்மது நசீர்

ஆகியோர் எமது ஹஜ் குழுவை வழிநடத்துவர்.
பதிவுகளுக்குத் தயவு செய்து தொடர்பு கொள்க-
புறப்படும நாள்- 15-06-1990

Al-Haj A M S Abdul Rahman
Telephone 435493 ,

Al Haj M A Ossman
Telephone 693147

Al Haj T Puthra Synoon
Telephone 545276

Al Haj M H M Nawaz
Telephone 437067

அசௌகரியங்களைத் தவிர்க்க உடன் பதிவு செய்யுங்கள்-

**CEYPRO TRAVELS LTD.**

(Subsidiary of Ceypro Exports Ltd)

94—2/7, York Buildings
York Street
Colombo — 1

Telephone: 545276, 437067

தினபதி

தந்தி "தினபதி" கொழும்பு-
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல- 1613

— 1990 மே 21 —
சுடர் 18 கதிர் 4488

## யானைக் கொலை தடுத்து நிறுத்தவேண்டும்

கடந்த வாரம குமணைப் பகுதியில் 12 யானைகள் கொல்லப்பட்டன. நொச்சியாகமைப் பகுதியிலும இரண்டு யானைகள் கொல்லப்பட்டன.

இறந்த 14 யானைகளின் உடல்களையும கிராமவாசிகள் கண்டு அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்தார்கள்.

துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இறந்த யானைகளின் உடல்களில் காணப்பட்டன.

இந்த யானைகளை யார் சுட்டுக் கொன்றார்கள்? எதற்காக சுட்டுக் கொன்றார்கள்? இந்த விவரங்கள் இன்னும அறியப்படவில்லை.

யானைகள் கொல்லப்பட்டது பற்றி விசாரணை நடத்துவதற்குச் சென்ற பொலீஸார் விரட்டியடிக்கப்பட்டார்கள் என்று பொலீஸ் பகுதியினர் கூறுகிறார்கள்.

யானைத் தந்தம பெறுமதி மிக்க பொருள். யானைத் தந்தத்தை எடுப்பதற்காக அவ்வப்போது சிலர் யானைகளைக் கொன்று வருகிறார்கள்.

ஆனால் இப்படி ஒரே வேளையில் பல யானைகள் கொல்லப்பட்ட சமபவம இதற்கு முன்னர் நடைபெறவில்லை.

யார், எதற்காக யானைகளைக் கொன்றாலும அது கவலைக்கு உரிய விஷயமாகும.

யானையும காட்டு மிருகங்களும மற்றும பிராணிகளும இயற்கை எமக்கு அளித்த

# உல்லாச பயணத்துறை மூலம் மேலும் வருவாய்

## பழைய நிலைக்கு கொண்டுவர அரசாங்கம் தீவிர நடவடிக்கை

மிகக் குறுகிய காலத்தில் உல்லாச பயணத்துறை பெரிய அளவில் செழித்து வளர்ந்த நாடு இலங்கை- 1982ஆம ஆண்டில் ஐந்து லட்சம் வெளிநாட்டுப் பயணிகள் இலங்கைக்கு வந்திருந்தனர்- 85ஆம ஆண்டளவில் இத்தொகை இரண்டு மடங்காகும என நமபிக்கையுடன் எதிர்பார்க்கப்பட்டது-

ஆனால் 1983 ஆம ஆண்டு இனக் கலவரத்தோடு உல்லாசப் பயணத்துறை தொடர்பான எல்லா எதிர்பார்ப்புகளும நசிந்த போயின-

இத் துறையை ஒரு நாளில் மீட்டெடுத்து விட முடியாது-

நீண்டகால அடிப்படையிலான திட்டமகளின் மூலமே இத் துறையைப் படிப்படியாக முன்னேற்ற முடியும-

உல்லாசப் பயணத்துறை சிறந்திருந்தபோத தேயிலை வருமானத்தக்கு அடுத்தபடியாக அந்நியச் செலாவணியை அள்ளித் தந்த ஒரு துறையாக இது விளங்கி வந்தத குறிப்பிடத்தக்கது- மேலும ஏராளமானோருக்கு வேலைவாய்ப்புகளை அளிக்கவல்லது இந்துறை-

மேலும இத்துறையின் மூலம போதிய படிப்பறிவற்றவர்களும கூட பயிற்சி பெறுவதன் மூலம அதிகாரி அந்தஸ்த பெற்ற ஒருவரின் வருமானத்தைப் பெற முடியும என்பத இத்துறையின் மற்றுமொரு விசேஷத் தன்மையாகும-

இவ்வாறாக நாட்டுக்கு பல் வகையில் உதவக் கூடிய இத் துறையை பழைய நிலைக்குக் கொண்டுவர இப்போது போதமான ஆட்பலம இல்லை- பயிற்சியும அனுபவமும மிக்க ஹோட்டல் உத்தியோகத்தர்கள் பலர் வெளிநாடுகளுக்கு தொழில் பெற்று சென்றுவிட்டனர்-


மற்றும பலர் வேறு தொழில்களில் அமர்ந்துவிட்டனர்- இதனால் ஐந்த நட்சத்திர ஹோட்டல்களின் உயர்மட்ட பதவிகளில் வெளிநாட்டினரை அமர்த்த வேண்டிய நிலை இன்று உருவாகியிருக்கிறது-

ஹோட்டல் துறை ஊழியர்களை பயிற்றுவிக்கும பொருட்டு பல பயிற்சிப் பாடசாலைகள் நாட்டில் பல பகுதிகளில் தனியார்துறையுடன் இணைந்து நடத்தவதன் மூலம ஹோட்டல் ஊழியர் உத்தியோகத்தர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியும-

உல்லாசப் பயணத்துறை பாவனையின் பொருட்டு வாகனங்களை இறக்குமதி செய்வதில் சலுகைகள் வழங்கப்பட்டிருப்பத உல்லாசப் பயணத்துறை ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் முக்கியமானதாகக் கருதப்படுகிறத-

போக்குவரத்து வசதிகளைத் தராமல் ஊழியர்களை உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கல் சில ஹோட்டல் உரிமையாளர்கள், சுற்றுலா நிறுவனத்தினர் ஆகியோருக்கு இலகு கடன் வசதிகளை வழங்குகின் உல்லாசப் பயணத்துறையை பழைய நிலைக்குக் கொண்டுவந்துவிட முடியும என்ற சுட்டிக் காட்டப்படுகிறத-

உல்லாசப் பயணத்துறை சிறக்குமானால் கைப்பணித்துறை கைத்தறி தொழில் போன்ற எத்தனையோ நலிவுற்ற சிறு கைத்தொழில்களைக் கை தூக்கிவிட்டு கிராமப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யக் கூடியதாக இருக்கும- [ம-032]



## நோன்பு பெருநாள் விழா

அண்மையில் புத்தளம நகரில் நடைபெற்ற நோன்புப் பெருநாள் விளையாட்டு விழாவின் போத பிரதம அதிதியாக புத்தளம தொகுதி மக்களின் நலன்களைக் கவனிப்பதற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட முஸ்லிம சமய, கலாசார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ எச் எம அஸ்வர் கலந்து கொண்டார்.

அமைச்சருக்கு வலதுபுறமாக புத்தளம தொகுதி ஐ தே க அமைப்பாளரும நகரசபைத் தலைவருமான அல்ஹாஜ் எம ஐ பிஸ்ருல்ஹாபியும, இடதுபுறமாக புத்தளம தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் அல்ஹாஜ் எம எச் எம நவவியும காணப்படுகின்றனர்.
[படம- புத்தளம நிருபர் ஏ எஸ் புல்கி]

(இ-241)

## சாதனை புரிந்த ஆசிரியர்களை பாராட்டும் திட்டம்

### விரைவில் நடைமுறை

நிந்தவூர், மே 19

கல்முனை உதவிக் கல்விப் பணிப்பாளர் அலுவலகப் பிரிவிலுள்ள பாடசாலைகளில் கடமையாற்றும ஆசிரியர்களிடையே சாதனை புரிந்த ஆசிரியர்களைப் பாராட்டும திட்டம ஒன்று விரைவில் நடைமுறைப்படுத்தப்பட இருக்கின்றது.

கல்முனை உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் ஐ எம இஸ்ஸடீன், இதற்கான முன் மாதிரித் திட்டம ஒன்றை வகுத்துச் செயல்படுத்த உத்தேசித்துள்ளார்.

கல்முனைக் கோட்டத்தில் (உதவிக் கல்விப் பணிப்பாளர் அலுவலகப் பிரிவில்) விஷேட சாதனை புரியும ஆசிரியர்களின் பல ஆசிரியர்கள் தமக்குரிய லீவுகளை எடுக்காமல் இருப்பதுடன், மாணவர்களுக்கு விஷேட வகுப்புகளை வைத்து திறமையான கற்பித்தலையும செய்து வருகின்றார்கள்.

அத்துடன் கல்வி அபிவிருத்தி தொடர்பான பல்வேறு வேலைத் திட்டங்களையும பொறுப்பேற்றுச் செய்து கல்வி அபிவிருத்திக்காக உழைத்து வருகின்றனர்.

இத்தகைய சாதனைகள் புரியும ஆசிரியர்களே, கல்முனை உதவிக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தினால் பாராட்டப்பட்டு ஊக்குவிக்கப்படவுள்ளனர்.

கொத்தணி அதிபர்களின் சிபார்சின் பேரில் சாதனை புரி

## போக்குவரத்து பாதிப்பு

மூதூர், மே 19

மூதூர் பகுதியில் வீதிகள் மிக மோசமான நிலையில் உள்ளன-

## பின்தங்கிய கிராமங்களில்

## செய்தித் திரட்டு

### பொதுக் கிணறுகள் அமைப்பு

நிந்தவூர் மே 19

சர்வோதய இயக்க கல்முனை மாவட்ட மத்திய நிலையப் பிரிவில் வறிய மக்களின் நலன் கருதி பொதுக் கிணறுகளும், மலசல கூடங்களும அமைக்கப்பட்டுள்ளன-

சர்வோதய இயக்க ஜீவநாடி வேலைத் திட்டத்தின் கீழ் இவை அமைக்கப்பட்டுள்ளன-

இதன்படி சம்மாந்துறை, நிந்தவூர், கல்முனை, பொத்துவில், பாண்டிருப்பு ஆகிய இடங்களில் ஐந்து பொதுக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன- (ஜ-217)

### அழகியற் கலை ஸ்தூபிகள்

கிண்ணியா மே 19

கிண்ணியா பிரதேச கல்வி வட்டம அப்பிரதேசத்தில் அமைந்துள்ள குர்ஆன் மத்ரஸாக்கள், மஸ்ஜிதுகள், பாடசாலைகள், மையவாடிகள் மற்றும பொதுநல நிலையங்கள் போன்றவற்றின் கலை, கலாசாரங்களைப் பிரதிபலிக்கக் கூடிய வகையில் "அழகியற் கலை ஸ்தூபிகளை" நிருவகிப்பது என தீர்மானித்திருக்கின்றது-

இதன் முதற் கட்டமாக கிண்ணியா மத்திய மகா வித்தியாலயம சின்னக் கிண்ணியா அல் அக்ஸா மகா வித்தியாலயம போன்றவற்றினை தெரிவு செய்துள்ளது- (ஜ-151)

### பாடசாலை பெயர் மாற்றம்

கிண்ணியா மே 19

கிண்ணியா உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கச்சக் கொட்டித்தீவு அரசினர் முஸ்லிம கலவன் பாடசாலை "அந்நஜாத்" (ஈடேற்றம) வித்தியாலயமாக பெயர் மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது-

மேற்படி வித்தியாலய அதிபர் ஜனாப் எம எம ஷரீப் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாய் இவ்வித்தியாலயம பெயர் மாற்றம் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது- (ஜ-151)

### ஆசிரியர்கள்

களும் மற்றும் பிராணிகளும் இயற்கை எமக்கு அளித்த அருங்கொடை. அவை பாது காக்கப்பட வேண்டியவை.

இலங்கை யானைகள் தனித் துவமானவை. அவை உலகப் பிரசித்தி பெற்றவை.

இலங்கையில் யானைகளின் எண்ணிக்கை இப்போது வெகு வாகக் குறைந்து வருகிறது.

யானைகள் கண்டபடி கொல்லப்படுவது அதற்கு ஒரு காரணம்.

இன்னொரு காரணம்: அபி விருத்தித் திட்டங்களின் பெய ரால் காடுகள் அழிக்கப்பட்டு வருவதாகும்.

இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 20 முதல் 27 சத வீதமே இப்போது காடாக இருக்கிறது.

காடுகள் அழிக்கப்படும் போது காட்டு விலங்குகள் அங்கே வாழ முடியாத நிலை ஏற்படுகிறது. வன விலங்கு களின் இன விருத்தியும் குறைகிறது.

இப்போதெல்லாம் மக்கள் வாழும் பகுதிகளுக்கு யானை கள் வந்து அட்டகாசம் செய் கின்றன என்ற அடிக்கடி செய்திகள் வருகின்றன. காட் டுப் பகுதி குறையக் குறைய யானைகள் நாட்டுக்கு வரா மல் வேறு எங்கு போகும்?

இந்த நிலைமை தொடர்ந் தால் இலங்கையில் இன்னும் சில ஆண்டுகளில் யானை இனமே இல்லாமல் போய் விடும். அதனால் இப்போ திருந்தே காடுகளையும் யானைகளையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண் டும்.

இயற்கை வளம் அழிவது நாட்டுக்குப் பெரும் நஷ்ட மாக அமையும்.

மிக மோசமான நிலையில் உள்ளன.

இவ் வீதிகளின் அவல நிலை இப் பிரதேசத்தில் போக்கு வரத்துத் துறையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின் றது.

மூதூர் - வெருகல் வீதி, மூதூர் - கூனித்தீவு வீதி, மூதூர் - மல்லிகைத்தீவு வீதி, மூதூர் - கோப்பூர் வீதி உட்பட மூதூர் பிரதேசத்தில் உள்ள எல்லா வீதிகளும் உருக்குலைந் துள்ளன.

இவ் வீதிகள் உருக்குலைந்துள் ளதால் வாகனங்கள் அடிக்கடி பழுதடைகின்றன.

இதனால் இவ் வீதிகளில் குறைந்தளவிலான வாகனங்களே சேவையில் ஈடுபடுத்தப்படுகின் றன. [ஐ-401]

## கூட்டம் ஒத்திவைப்பு

நிந்தவூர், மே 19

அஞ்சல், தொலைத் தொட ர்பு சேவையாளர்கள் சங்க கல்முனை மாவட்டக் கிளை யின் வருடாந்தப் பொதுக் கூட்டம் காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் இறுதி யில் இந்த வருடாந்தப் பொதுக் கூட்டத்தை கல்முனை பிரதம தபாலக மண்டபத்தில் நடத்த ஏற்பாடாகியிருந்தது.

ஆறு மாத கால ஊக்குவிப் புப் பணம் வழங்கப்படாமை தொடர்பாக தாய்ச் சங்கம் போதிய நடவடிக்கை எடுக்க வில்லை என்பதன் காரணமாக மேற்படி வருடாந்தப் பொதுக் கூட்டம் காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டதாக அறிய வருகின்றது. [ஐ-217]

# கிராமங்களில் இலவச சிகிச்சை முகாம்கள்

## சர்வோதய இயக்கம் நடத்தும்

நிந்தவூர், மே 19

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசத்தைச் சேர்ந்த மிகப் பின்தங்கிய கிராமங்களில் இலவசசிகிச்சை முகாம்கள் நடத்தப்பட விருக்கின்றன.

சர்வோதய இயக்க கல்முனை மாவட்ட மத்திய நிலையம் இந்த சிகிச்சை முகாம்களை நடத்தவிருக்கின்றது.

சர்வோதய இயக்க கல்முனை மாவட்ட இணைப்பாளர் திரு கே கனகரத்தினம் இதற்கான நடைமுறைத் திட்டம் ஒன்றை வகுத்துள்ளார்.

முதற் கட்டமாக சர்வோதய பிரதேச நிலையப் பிரிவு வாரி யாக பின்தங்கிய கிராமங்களைத் தெரிவு செய்து இலவச வைத்திய சிகிச்சை முகாம்களை நடத்தவும் ஆவன செய்துள்ளார்.

இந்த சிகிச்சை முகாம்களில் வைத்திய ஆலோசனைகள் வழங்கப்படுவதுடன் நோயாளர் களுக்குரிய மருந்து வகைகளும் வழங்கப்படவுள்ளன.

பொத்துவில் தாமரைக்குளம் பகுதியில் முதலாவது சிகிச்சை முகாம் அண்மையில் நடத்தப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சுகாதாரத் திணைக்களத்துடன் இணைந்த பிரதேச மட்டத்தில் சூழல் பாதுகாப்பு சம்பந்தமான கருத் தரங்குகளை நடத்தவும் உத்தே சிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட இணைப்பாளர் திரு கனகரத்தி னம் தெரிவித்தார். [ஐ-217]

(உதவிக் கல்விப் பணிப்பாளர் அலுவலகப் பிரிவில்) விசேட சாதனை புரியும் ஆசிரியர்களின் சேவைகளைப் பாராட்டவும், உத்தியோகபூர்வமாக அத்த கைய ஆசிரியர்களுக்குப் பாராட் டுக் கடிதம் வழங்கவும் இந்தத் திட்டத்தின் மூலம் ஆவன செய்ய விரும்புவதாக உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் இஸ்ஸடீன் தெரிவித்தார்.

கொத்தணி அதிபர்களின் சிபார்சின் பேரில் சாதனை புரி யும் ஆசிரியர்கள் தெரிவு செய் யப்பட்டு, திட்டம் நடைமுறைப் படுத்தப்படும்.

அவர்களுக்கு விசேட தரா தரப் பத்திரங்களும் கல்முனை உதவிக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தால் வழங்கப்பட விருக்கின்றன. (ஐ-217)

# காலத்தால் அழியாத சிறப்பு வாய்ந்தது தமிழ் மொழி

## —தேவராஜ்

மஸ்கெலியா, மே 19

"தமிழ் மொழி ஒரு சிறப்பு வாய்ந்த மொழியா கும். காலத்தால் அழியாத சிறந்த மொழியாகும். உலகில் எத்தனையோ மொழிகள் தோன்றின, மறைந் தன. ஆனால், தமிழ் மொழி அவ்வாறானதல்ல. எனவே தான் உலகளாவிய ரீதியில் பரந்து உயிர் பெற்று துடிப்பு டன் வாழ்ந்து கொண்டிருக் கின்றது"

இவ்வாறு இந்து கலாசார, தமிழ் மொழி ராஜாங்க அமைச் சர் திரு பி பி தேவராஜ் கூறி னார்.

பொகவந்தலாவ சென் மேரிஸ் தமிழ் மகா வித்தியால யத்தில் நடைபெற்ற "முத்தமிழ் விழா"வில் பிரதம விருந்தினரா கக் கலந்து கொண்டு உரையாற் றிய போதே இவ்வாறு அவர் கூறினார்.

வித்தியாலய பிரதான மண்ட பத்தில் நடைபெற்ற இவ்விழா வில் கொத்தணி அதிபரான திரு ந பாலசுந்தரம் தலைமை வகித் தார்.

தொடர்ந்து உரையாற்றுகை யில் திரு தேவராஜ் கூறியதா வது—

"1983 தமிழ் மொழியை பேசு வதற்குக் கூடப் பயந்த காலம். தமிழரென சொல்ல அச்சப்பட்ட காலம். இனியும் தமிழ் வள ருமா, வளராதா? என்ற அச்சம் காணப்பட்டது.

தொடர்ந்து 1988இல் ஜனாதி பதி என்னை ராஜாங்க அமைச் சராக நியமித்ததன் காரணமாக அத்தகையதொரு நிலை இப் பொழுது சிறிது சிறிதாக மாறி தமிழ் மொழியைக் காப்பது, அதை வளர்ப்பது எவ்வாறு என் பதனையெல்லாம் எனது அமை ச்சு ஆராய்ந்து வருகின்றது.

இந்நாட்டிலுள்ள தமிழறிஞர் கள், கல்விமான்கள், ஆசிரியர் கள், மொழிப் பற்றுடையவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமிழ் மொழியை வளர்ப்பது தொடர் பான சகல யோசனைகளையும், எமக்குச் சமர்ப்பிப்பதால் அதன் மூலம் தமிழ் மொழியை வளரச் செய்ய முடியும்.

மலையகத்தைப் பொறுத்த வரை, இதுவொரு பின்தங்கிய பகுதியாகவிருந்தாலும், இங்கு வாழ்கின்ற மக்கள் தம் மொழி மீது உயர்வான மதிப்பினை வைத் திருக்கின்றனர். இன்றைய மலை யக இளைஞர் சமூகம் இதில் புதிய திருப்பத்தைக் காண முனைந்து கொண்டிருக்கின்றது.

தமிழகத்தில் இருக்கும் எழுத் துச் சீர்திருத்த நிலை மைகளைப் பற்றி எம் நாட்டிலுள்ள தமிழறிஞர் கள், விரிவுரையாளர்களை அழை த்து ஆலோசனை பெற்றபின்னரே ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுத்தேன்.

அவரும் அதனை ஏற்றுக் கொண்ட பின்னர் படிப்படியாக எழுத்துச் சீர்திருத்தமானது நடை பெற்று வருகின்றது.

இப்பகுதிகளிலுள்ள இளம் ஆசிரியர்கள் தமிழ் மொழியின் சிறப்பினை நிலைநாட்ட முன் வரல் வேண்டும். அதற்கு இந்த முத்தமிழ் விழா வழிகோலாக அமையுமெனக் கருதுகின்றேன்.

இதனால் தமிழ் மொழி கலை, கலாசார ஆற்றல்களை மேன் மேலும் வலுப்படுத்தி, சிறப்பிக்க வேண்டுமாறு கோருகின்றேன்"

இவ்வாறு அவர் கூறினார்.

தொடர்ந்து சீடா கல்விப் பணிப்பாளரான திரு இரா சிவ சிதம்பரம், சீடா கல்வி அதிகாரி திரு சி நவரட்ன ஆகியோரது உரைகளும், திரு ப லிங்கதாசன், குறிஞ்சித் தென்னவன் ஆகியோ ரது கவியரங்கும் இடம்பெற்றன.

இறுதியில் மாணவரது பாட்டு, பேச்சு, கவிதை, நாடகம், நட னம் போன்றவையும் இடம் பெற்றதோடு, "தமிழ் முரசு" பத்திரிகையும் வெளியிடப்பட் டது. தமிழ் இலக்கிய மன்றத்தின் செயலாளர் திரு த பிரபாகர் நன்றியுரை நிகழ்த்தினார்.

(ஐ-408)

## ஆசிரியர்கள் புகார்

குட்டுகஸ்தோட்டை மே 19

கண்டி கல்வி மாவட்டத்தின் வத்துகாமம் கல்விப் பிரிவுக்குட் பட்ட சில பாடசாலைகள் புறக் கணிக்கப்படுவதாக கூறப்படுகி றது.

துவலந்தன்னை நக்கில்ஸ் தமிழ் வித்தியாலயம் மிகவும் பின்தங்கிய போக்குவரத்து வசதி அற்ற பகு தியில் அமைந்திருக்கிறது.

அப்பாடசாலை ஆசிரியர்களு க்கு கஷ்டப் பிரதேச அலவன்ஸ் வழங்கப்படுவதில்லை.

ஆனால் அதைவிட வசதியான மடுல்கலை, ஹாத்தலே ஆகிய பகுதிகளின் தமிழ், சிங்களப் பாட சாலைகளுக்கு கஷ்டப் பிரதேச அலவன்ஸ் வழங்கப்படுகின்றது என்ற ஆசிரியர்கள் முறையிடுகின் றனர். (ஐ-139)

## இசை நாடகம் மேடையேற்றம்

எருக்குலம்பிட்டி மே 19

அமரத்துவம் அடைந்த எருக் குலம்பிட்டி பக்கீர் புலவர் இயற் றிய "காந்தரூபி" எனும் இசை நாடகத்தை மீண்டும் மேடை யேற்ற மன்னார் மாவட்ட இலக் கிய வாதிகள் உத்தேசித்துள்ளனர்.

ஏற்கனவே "காந்தரூபி" நாட கம் எருக்கலம்பிட்டியில் தொடர் ந்து ஏழு நாட்களாக நடை பெற்றது.

இந்த நாடகத்தை நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்த மக்கள் பார்த்துப் பாராட்டினர். (ஐ-74)

காஷ்மீரில்

# இனக் கலவரத்துக்கு

# பாக். தூபம்

## இந். வெளியுறவு அமைச்சர் குஜ்ரால் குற்றச்சாட்டு

புதுடில்லி, மே 20

**பாகிஸ்தான் காஷ்மீரில் இனக் கலவரத்திற்கு தூபமிட்டு வருகிறது. 1947இல் இந்தியாவில் ஏற்பட்ட ஸ்திரமற்ற நிலைமையை மீண்டும் ஏற்படுத்த முயன்று வருகிறது. இப்படி இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் குற்றம்சாட்டினார்.**

அவர் கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தின் சிம்ரஷ்ட எம்.பிக்களைச் சந்தித்த போது இதனைத் தெரிவித்தார்.

காஷ்மீர் விவகாரம் தொடர்பாக பாகிஸ்தான் தீட்டியிருக்கும் திட்டம் பற்றிய மதிப்பீடு ஒன்றைத் தரும்படி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது—

காஷ்மீரை பலாத்காரத்தின் மூலம் கைப்பற்ற முடியாது என்பதை பாகிஸ்தான் தெரிந்து வைத்திருக்கிறது.

இனப் பூசல்களைத் தூண்டுவது அதன் உண்மையான திட்டமாகும். அதன் மூலம் 1947 இல் ஏற்பட்ட ஒரு நிலைமையை உருவாக்குவது அதன் நோக்கம்.

பாகிஸ்தானின் தாக்குதல் இந்தியாவுக்கு மட்டும் எதிரானது அல்ல. அது இந்தியாவின் மதச் சார்பின்மைக் கொள்கை மீது நடத்தப்படும் தாக்குதலுமாகும்.

பாகிஸ்தானுடன் பேச்சு வார்த்தை நடத்த இந்தியா விரும்புகிறது. ஆனால் அதனை மூன்றாவது தரப்பு மத்தியஸ்தத்தின் மூலம் நடத்த விரும்பவில்லை.

இப்படி இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார்.

இச்செய்தியை இந்திய வெளியுறவு அமைச்சு வட்டாரங்கள் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தன.

இந்தியாவும், பாகிஸ்தானும் 1947 இல் பிரிட்டனிடம் இருந்து சுதந்திரம் அடைந்தன.

அப்போது இரு நாடுகளும் பிரிந்து சென்ற போது, இடம் பெற்ற இனக்கலவரங்களில் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்கள்.

சுதந்திரம் அடைந்த பின்னர் இந்த இரு நாடுகளும் மூன்று தடவை எல்லை யுத்தத்தை நடத்தியிருக்கின்றன. இந்த யுத்தங்களில் இரண்டு யுத்தங்கள் காஷ்மீர் விவகாரம் தொடர்பாக நடைபெற்றவையாகும். (ண)

## 70 அடி சுரங்கம் அமைத்து பாக். கைதிகள் தப்பினர்

இஸ்லாமாபாத், மே 20

பாகிஸ்தானிய சிறைச்சாலை ஒன்றில் வைக்கப்பட்டிருந்த 9 கைதிகள் நிலத்திற்கு அடியில் சுமார் 70 அடி சுரங்கத்தைத் தோண்டி தப்பிச் சென்றார்கள்.

தப்பிச் சென்றவர்கள் பாரதூரமான குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

சிறைச்சாலை அதிகாரிகள் இத்தகவலை கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தார்கள்.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்தில் உள்ள குஜ்ராத் சிறைச்சாலையிலேயே இச்சம்பவம் நிகழ்ந்திருக்கிறது.

தப்பிச் சென்ற கைதிகளில் நால்வர் 25 வருடம் முதல் 50 வருடம் வரையிலான சிறைத் தண்டனையை அனுபவித்து வந்தவர்களாவர்.

ஏனையவர்கள் கொலை வழக்கு விசாரணையை எதிர்நோக்கியிருந்தார்கள். இவர்கள் தப்பிச் சென்ற விஷயம் கடந்த வியாழக்கிழமையே தெரிய வந்தது. (ண)

## உலகச் செய்திகள்

பாகிஸ்தான் வசமுள்ள

## ஆஸாத் காஷ்மீரில் இன்று தேர்தல்கள்

முஸபராபாத், மே 20

பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஆஸாத் காஷ்மீரில் இன்று திங்கட்கிழமை தேர்தல்கள் நடைபெறுகின்றன.

இந்தத் தேர்தல்களில் வாக்குப்பதிவின் போது மோசடிகள் இடம்பெறலாம் என பாகிஸ்தானிய எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை எச்சரித்தார்.

ஆஸாத் காஷ்மீர் பிரதேசத்தின பிரதமர் சிகான் தர் ஹயத் கான் இதுபற்றிக் கூறுகையில் பின்வருமாறு தெரிவித்தார்—

ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சி காஷ்மீர் தேர்தல்களில் மோசடிகளைப் புரிந்தால் ஒன்பது கட்சிகள் அங்கம் வகிக்கும் எதிர்க்கட்சி கூட்டணி தேர்தல் முடிவுகளை நிராகரிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் இருக்கும் காஷ்மீரின் முஸாபராபாத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் ஆஸாத் காஷ்மீர் பிரதமர் சிகானும், எதிர்க்கட்சிக் கூட்டணியின் தலைவர்களும் பேசினார்கள்.

அங்கு தொடர்ந்து பேசுகையில் ஆஸாத் காஷ்மீர் பிரதமர் சிகான் கூறியதாவது—

மத்திய அரசாங்கத்தின் பிரதமர் பெனாஸிர் பூட்டோ காஷ்மீர் மக்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்த முயன்று வருகிறார்.

எனவே நாம் எதிர்காலத்தில் பாகிஸ்தானுடனான எமது உறவை மறுபரிசிலனை செய்ய வேண்டியிருக்கிறது.

இப்படி அவர் கூறினார்.

1971 இல் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே யுத்தம் நடைபெற்றது.


அதனையடுத்து 1972 ஜூலை மாதம் இந்தியாவும், பாகிஸ்தானும் சிமலா ஒப்பந்தத்தைச் செய்து கொண்டன.

கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் இருந்த சகல துருப்புகளும் வாபஸ்பெற அந்த ஒப்பந்தம் வசதி செய்தது.

18 வருடங்களுக்கு முன்னர் இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தத்தை பாகிஸ்தான் ரத்து செய்ய வேண்டும் என்று கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ஆஸாத் காஷ்மீர் பிரதமர் சிகானும், எதிர்க்கட்சிக் கூட்டணித் தலைவர்களும் வலியுறுத்தினார்கள்.

இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்து வரும் ஜம்மு - காஷ்மீரில் இந்தியத் துருப்புகள் கடந்த சில மாதகாலமாக பிரிவினைவாத முஸ்லிம் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. (ண)

நீங்களும் பஜாஜ் ஒன்றை வாங்கலாம்.



பாகிஸ்தானின் தாக்குதல் இந்தியாவுக்கு மட்டும் எதிரானது அல்ல. அது இந்தியாவின் மதச் சார்பின்மைக் கொள்கை மீது நடத்தப்படும் தாக்குதலுமாகும்.

பாகிஸ்தானுடன் பேச்சு வார்த்தை நடத்த இந்தியா விரும்புகிறது. ஆனால் அதனை மூன்றாவது தரப்பு மத்தியஸ்தத்

## கராச்சியில்

## இனக் கலவரம்

கராச்சி, மே 20

கராச்சியில் ஒரு வார காலம் நீடித்த இனக் கலவரங்களில் இறந்தவர்களின் எண்ணிக்கை கடந்த வெள்ளிக்கிழமை 13ஆக அதிகரித்தது.

1986இல் பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் சொந்த மாநிலமான சிந்து மாநிலத்தில் ஆரம்பமான இனக் கலவரம் கராச்சியிலிருந்து 90 மைல் தொலைவிலுள்ள ஹைதராபாத்துக்கும் பரவியிருக்கிறது.

ஹைதராபாத்தில் ஐந்து நாட்களில் 14 பேர் கொல்லப்பட்டார்கள். (ண)

## நாடாளுமன்றம்

## புதன் கூடும்

கொழும்பு, மே 20

நாடாளுமன்றம் 23 ஆம் திகதி புதன்கிழமை மீண்டும் கூடும். இந்த வாரம் மூன்று நாட்களுக்கு நாடாளுமன்ற அமர்வுகள் நடைபெறும்.

24 ஆம் திகதி வியாழக்கிழமை அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பது தொடர்பான பிரேரணை மீதான விவாதம் நடைபெறும்.

[illegible] நாடாளுமன்ற [illegible] ஏற்பாடுகள் [illegible] காலை 9 மணி [illegible] 8 மணி [illegible] விவாதத்திற்காக [illegible]

[illegible] 12-30 [illegible] ஒரு மணி [illegible] போசன [illegible] க்காக ஒதுக்[illegible] ளது. (ண-கு)





விரும்பிய நேரத்தில் விரும்பிய இடத்திற்கு இலகுவாகப் பயணம் செய்ய நவீன காலத்திற்கு உகந்த வாகனம் .பஜாஜ் நீங்களும் இந்த அற்புதமான பஜாஜ் வாகனம் ஒன்றைச் சொந்தமாக வாங்கி மாதாமாதம் நல்ல இலாபம் சமபாதிக்க இதுவே சிறந்த வாய்ப்பு.

றிச்சர்ட பீரிஸ் நிறுவனமும் வங்கிச் சேவையும் இணைந்து வகுத்திருக்கும் சுயதொழில் வாய்ப்பு ஆதாரத் திட்டத்தின் கீழ் பஜாஜ் வாகனம ஒன்றை வாங்குங்கள் சாரதி அனுமதிப பத்திரம் கொண்டுள்ள 21 வயதிற்கு மேறபட்ட அனைவருக்குமபஜாஜ் வாகனத்தின் விலையில் 60 சதவீதம கடனாக வழங்கபபடும்

எனவே குறைந்தபடசம் உங்களுக்கு ரூ 35.000 செலவிட முடியுமானால் புத்தம் புதிய பஜாஜ் வாகனம ஒன்றை உரிமையாக்கிக் கொள்ள முடியும கடனைத் திருபபிச் செலுத்துவதற்கு 4 வருடகால அவகாசம் வழங்கபபடும்

பஜாஜ் வாகனம் உங்கள் தொழிலுக்கு மட்டுமல்ல உங்கள் குடும்பத்தினரின் தனிப்பட்ட பயணங்களுக்கும் உகந்தது.

சந்தை பாடசாலை .கோவில் உறவினர் இல்லம் .இப்படி எங்கு வேண்டுமானாலும் பஜாஜில் உல்லாசமாகச் சவாரி செய்யலாம

இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி பஜாஜ் ஒன்றை வாங்குங்கள் நிச்சயமாக நீங்கள் நன்மையடைவீர்கள

**றிச்சர்ட் பீரிஸ் மோட்டோர் கம்பனி லிமி**
60, ஹைடபார்க் கோர்னர்
கொழும்பு 2
தொலைபேசி 25701/2 422149 549480



இப்பொழுது!
ஒரே தடவையில்
முழுப் பணத்தையும்
செலுத்தி பஜாஜ்
வாகனத்தை
உடனடியாகவே
பெறலாம்

# பஜாஜ் பயணம் கோடி பெறும்

கடந்த வருடம்

# நெல் உற்பத்தி பெருமளவு வீழ்ச்சி

## மத்திய வங்கி அறிக்கையில் விவரம்

கொழும்பு, மே 20

இலங்கையின் நெல் உற்பத்தி கடந்த ஆண்டில் பெருமளவு வீழ்ச்சியடைந்திருக்கிறது.

1979 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பதிவு செய்யப்பட்ட ஆகக் குறைந்த உற்பத்தி இதுவாகும்.

இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

1989 ஆம் ஆண்டின் நெல் உற்பத்தி 20.6 லட்சம் மெட்ரிக் தொன்னாகும். (அதாவது 990 லட்சம் புசலாகும்) என மதிப்பிடப்பட்டுள்ளது.

1988 ஆம் ஆண்டின் உற்பத்தியை விட இது 17 சதவீத வீழ்ச்சியைக் காட்டுகிறது.

1988/1989 ஆம் ஆண்டின் சிறுபோகம், பெரும்போகம் ஆகிய இரண்டிலும் நெல் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது.


ஆகக் குறைந்த ஏக்கர் நிலப் பரப்பிலேயே நெல் விதைக்கப்பட்டது. முக்கிய நெல் உற்பத்தி பிரதேசங்களில் கடும் வரட்சி நிலவியதும் சகல நெல் விளைச்சல் வீழ்ச்சி அடைவதற்கான காரணங்களென அறிக்கை கூறுகிறது.

கடந்த ஆண்டில் நாட்டில் தோன்றிய குழப்ப நிலையும் நெல் உற்பத்தியைப் பெரிதும் பாதித்திருக்கிறது.

கடந்த ஆண்டின் மொத்த நெல் உற்பத்தியில் விதை நெல் தேவைகளும் மற்றும் செலவினங்களும் போக உள்நாட்டின் அரிசி உற்பத்தி 1989 இல் 12.3 லட்சம் மெட்ரிக் தொன்னாகும்.

உள்நாட்டு தேவைக்கு இந்த அரிசி போதுமானதாக இருக்கவில்லை.

இதனால் கடந்த ஆண்டில் வெளிநாட்டிலிருந்து 3 லட்சத்து 16 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. [ந—வ]



### கடனுதவித் திட்டம்

இலங்கை வங்கியின் மஸ்கெலியா கிளை சுயதொழில் வாய்ப்புக் கடனுதவித் திட்டத்தின் கீழ் ஒன்பது தையல் மெஷின்கள் அண்மையில் ஒன்பது மாதர்களுக்கு வழங்கியது. மெஷின்கள் வழங்கப்படுவதற்காக மஸ்கெலியா இலங்கை வங்கி முன்றலில் வைக்கப்பட்டிருந்த போது மெஷின்களை

படத்தில் மத்தியில் வங்கி முகாமையாளரான திரு பி ஆர் பெற்றிக் உட்கார்ந்திருப்பதையும் உதவி முகாமையாளரான திரு பி ஏ ஜி வீரக்கோன் உரையாற்றிக் கொண்டிருப்பதையும் வங்கி அலுவலர்களையும் காணலாம். [இ—408]

## சட்டவிரோத மின்சாரம் பெறுவோர் மீது கடும் நடவடிக்கை

நிந்தவூர், மே 19

நிந்தவூர்ப் பகுதியில் சட்ட விரோதமாக மின்சாரம் பெறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப் படவிருக்கின்றது.

சட்ட விரோதமாக தெரு மின்கம்பிகளில் கொழுவி மின்சாரம் பெறுவோர் இப் பகுதியில் அதிகரித்த வண்ணமுள்ளனர்.

இதனால் மின்சாரம் அடிக்கடி துடைப்படும் நிலை ஏற்பட்டு வருவதுடன், சட்டபூர்வமாக மின்சாரம் பெற்றிருப்போருக்கு உரிய வழியில் மின்சாரம் கிடைக்காது பெரும் சிரமங்களும் ஏற்பட்டு வருகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிந்தவூர்ப் பிரதேசப் பொறுப்பாளர் திரு விக்ரம, சட்ட விரோதமாக மின்சாரம் பெறுவோர் உடனடியாக அத்தகைய மின் தொடர்புகளைத் துண்டிக்க... சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றிருப்போரைக் கண்டு பிடித்து அவற்றைத் துண்டிக்கக் கோருமாறும் திரு விக்ரம கோரியுள்ளார்.

புலிகளின் எச்சரிக்கையை மீறி சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றிருப்போர் கண்டுபிடிக்கப் பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப் பட்டுள்ளது. [ஐ—217]

## பலஸ்தீன விடுதலை போராட்டத்துக்கு முழு ஆதரவு

— அஸ்வர்

கொழும்பு, மே 20

உலகத்தில் விடுதலை போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிப்பது என்றால் பலஸ்தீன விடுதலைப் ...

அகில இலங்கை இஸ்லாமிய சோஷலிஸ்ட் சங்கம் சகல முஸ்லிம் இயக்கங்களுடன் இணைந்து இஸ்ரவேலிய நலன்காப்புப் ...

வாக்கியது—

## மத்திய மாகாண ஆஸ்பத்திரி புனரமைப்புக்கு ரூபா 7 கோடி 16 லட்சம்

கண்டி, மே 19

மத்திய மாகாணத்தில் கிராம ஆஸ்பத்திரிகளைப் புனரமைத்து தரம் உயர்த்துவதற்காக மத்திய மாகாண சுகாதார அமைச்சுக்கு 7 கோடியே 16 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இந் நிதியில் 9 லட்சம் ரூபா ஏற்கனவே செலவிடப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரிகளில் நிலவும் குடி தண்ணீர் விநியோக சீர்கேடுகளை அகற்றவும் மலசலகூடம் மற்றும் ஆய்வுகூடங்கள் பல்வேறு சிகிச்சைப் பிரிவுகளின் விஸ்தரிப்புக்கும் இந் நிதி பயன்படுத்தப்படும்.

மேலும் மத்திய மாகாண சபை 33 லட்சம் ரூபாவை ஆஸ்பத்திரி புனரமைப்புப் பணிகளுக்காக ஒதுக்கியுள்ளது.

மேலும் உல்லாசப் பயணத் துறைக்கு 10 லட்சம் ரூபா செலவிடப்பட உள்ளது. [ஐ—017]

## விலை ஏற்றம்

சாவகச்சேரி, மே 19

சாவகச்சேரி சந்தையில் சின்ன வெங்காயம், மிளகாய் என்பவற்றின் விலைகள் வெகுவாக உயர்ந்துள்ளன.

அண்மைக் காலங்களில் கிலோ 6 ரூபா முதல் 8 ரூபா வரை விற்கப்பட்ட சின்ன வெங்காயம் இப்பொழுது கிலோ 28 ரூபாவிலிருந்து 30 ரூபா, 35 ரூபா வரை விலை உயர்ந்துள்ளது.

மிளகாய் கிலோ 70 ரூபா முதல் 75 ரூபா வரை விற்கப்படுகிறது. (ஐ—051)

## மீன் நோயை கட்டுப்படுத்தாவிட்டால் பொருளாதார வீழ்ச்சி?

### ஹிஸ்புல்லாஹ் எச்சரிக்கை

கொழும்பு, மே 20

கிழக்கில் மீன்களுக்கு ஏற்பட்டுள்ள நோயைக் கட்டுப்படுத்தாவிட்டால் நாட்டின் பொருளாதாரத்தில் பெரு வீழ்ச்சி ஏற்படும்.

இதன் மூலம் பாதிக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மீனவர்களுக்கு அரசாங்கம் விசேட உதவி வழங்க வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம் பி ஜனாப் எம் எல் ஏ எம் ஹிஸ்புல்லாஹ் இவ்வாறு நாடாளுமன்றத்தில் கூறினார்.

கடற்றொழிலாளர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்ட சட்டவரைவு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு அவர் மேலும் கூறியதாவது—

மீன்பாடும் தேனாட்டில் இன்று நோயினால் மீனகள் அழுகின்றன.

திருக்கோயில், கல்முனை, சாய்ந்தமருது, மட்டக்களப்பு பகுதிகளில் கடந்த ஒரு மாத காலமாக நோய் பரவி வருகிறது.

இதனை உடனடியாக தடுத்து நிறுத்த கடற்றொழில் அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

... கோடி ரூபா செலவில் மீன்பிடித் துறைமுகம் ஒன்றைக் கட்டி முடித்தது. அது இன்று செயலற்றுக் கிடக்கிறது. உதிரிப்பாகங்கள் பாழாகின்றன.

மீண்டும் இந்த மீன்பிடித் துறைமுகம் இயங்குவதானால் மீனவர்கள் அதிகமான நன்மை அடைவார்கள்.

இவ்வாறு ஜனாப் ஹிஸ்புல்லாஹ் கூறினார். [ந—கு]

## மக்களும் பதவியும்

### கல்வி வட்ட நிர்வாகிகள்

கொழும்பு, மே 20

கிண்ணியாப் பிரதேச கல்வி வட்ட நிர்வாகிகள் தெரிவு பெரிய கிண்ணியா அரசினர் முஸ்லிம் ஆண்கள் பாடசாலை கட்டடத்தில் அண்மையில் நடைபெற்றது.

கிண்ணியாப் பிரதேச கல்வி வட்ட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர்;— ஜனாப் எம் எச் ஏ ஹசன் (பீ ஏ) உபதலைவர்கள்;— ஜனாப்கள் ஐ ஏ ஹசன் (கவிஞர்) ஏ எம் எம் அலி (கவிஞர்)

செயலாளர்— ஜனாப் எம் ஐ அபுசாஹ் (ஆசிரியர்) உப செயலாளர்— ஜனாப் எம் எம் நிமத்துல்லா (ஆசிரியர்)

பொருளாளர்— ஜனாப் மஹ்ரூப் (ஆசிரியர்)

நிர்வாக சபை உறுப்பினர்கள்;— ஜனாப்கள் ஏ ஜே ரமலி (ஆசிரியர்) எஸ் ஏ வைத்துள்ளா (ஆசிரியர்) ஏ எம் ஏ றசூல் (குறநகை ஆசிரியர்) எம வை எம அலி (கவிஞர்) ஏ எல் ஜவ்பர் (ஆசிரியர்) யூ எம யுனைதீன் (ஆசிரியர்) ஏ எம ஏ பரீத் [நிருபர் — (ஆசிரியர்)]

ஆலோசனைக்குழு—

ஜனாப்கள்;— எஸ் ஏ முத்தலிபு (ஆசிரியர்) யூ ஏ முகைதீன்பாவா (ஆசிரியர்) எஸ் ஏ சரீபு (ஆசிரியர்) கனிபா (ஆசிரியர்)

[ஜ—151]

## புத்தளத்தில் தனியார் துறையினர் உற்பத்தி செய்த உப்பை உடன் கொள்வனவு செய்க

### ரணிலுக்கு அஸ்வர் கோரிக்கை

கொழும்பு, மே 20

புத்தளத்தில் கடந்த பத்து மாதங்களாகக் கொள்வனவு செய்யப்படாமல் குவித்து ...

இதனைத் தாம பரிசீலனை செய்து நிவாரணம் வழங்குவதாக உப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு ஒகஸ்டின் டயஸ் ...

...ஏற்பட்டு வருகின்றன—

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிந்தவூர்ப் பிரதேசப் பொறுப்பாளர் திரு விக்ரம, சட்ட விரோதமாக மின்சாரம் பெறுவோர் உடனடியாக அத்தகைய மின் தொடர்புகளைத் துண்டித்துக் கொள்ள வேண்டுமென எச்சரித்துள்ளார்—

இந்த விடயத்தில் அவ்வப் பிரிவுக்கான கிராம சேவை உத்தியோகத்தர்கள் ஒத்துழைத்து

## ...போராட்டத்துக்கு முழு ஆதரவு

— அஸ்வர்

கொழும்பு, மே 20

உலகத்தில் விடுதலை போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிப்பது என்றால் பலஸ்தீன விடுதலைப் போராட்டத்துக்குத்தான் எமது முழு ஆதரவையும் வழங்க வேண்டும்—

இவ்வாறு முஸ்லிம சமய, கலாசார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ எச் எம அஸ்வர் கூறினார்—

அகில இலங்கை இஸ்லாமிய சோஷலிஸ்ட் சங்கம சகல முஸ்லிம இயக்கங்களுடன் இணைந்து இஸ்ரவேலிய நலன்காப்புப் பிரிவை மூடியமைக்கு ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்குமுகமாக கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது—

இக் கூட்டம கடந்த செவ்வாய் மாலை கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு அகில இலங்கை சோனக சங்கத் தலைவர் டாக்டர் எம பாஹில் நிஸார் தலைமை தாங்கினார்—

கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் மேலும கூறியதாவது—

பலஸ்தீன தனி நாட்டு பிரகடனத்தை முதலாவதாக அங்கீகரித்த நாடு இலங்கையே— இதுவும எமது ஜனாதிபதியே என்பதை நாம பெருமையுடன் கூறிக் கொள்ள வேண்டும—

இந்நாட்டின் பிரஜைக்ளான எம்மை கௌரவப்படுத்துமுகமாக ஜனாதிபதி இந்த முடிவை எடுத்தமைக்காக ஜனாதிபதிக்கு எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்—

இவ்வாறு அல்ஹாஜ் ஏ எச் எம அஸ்வர் கூறினார்—

சுச்சரித்த இயக்கத்தின் செயலாளர் திரு ரத்னசிரி ராஜபக்ஷ கூறியதாவது—

பலஸ்தீனத்திற்கு நன்மை பயக்க வேண்டும என சகல முஸ்லிமகளும எண்ணுகிறார்கள் முஸ்லிமகளை கௌரவப்படுத்தும நோக்கத்துடன் ஜனாதிபதியின் இந்த முடிவு பாராட்டத்தக்கதாகும—

உலகில் 12 அரபு நாடுகள் இருக்கின்றன இவை தங்களின் பேதங்களை மறந்து ஒன்றுபட வேண்டும—

இவ்வாறு அவர் கூறினார்—

திருமதி விவியன் குணவர்தன (சமசமாஜக் கட்சி) கூறியதாவது—

ஐக்கிய நாடுகள் சபை தான் தற்போதைய இஸ்ரவேலை உருவாக்கியது—

இஸ்ரவேலர்களை வெளியேற்ற வேண்டும என கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை கையளிக்க பல முறை ஜனாதிபதியிடம சென்றோம, பல மணி நேரம காத்திருந்தோம— என்றாலும எமது கோரிக்கை இப்போதாவது நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதை இட்டு மகிழ்ச்சி அடைகிறேன்—

இவ்வாறு அவர் கூறினார்—

வர்த்தகத்துறை அமைச்சர் ஜனாப் ஏ ஆர் மன்சூர் உரையாற்றுகையில்—

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் முஸ்லிம மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளார்—

பலஸ்தீனத்திற்கும பலஸ்தீன மக்களுக்கும முஸ்லிமகளாகிய எமது ஆதரவு என்றும உண்டு என்றார்—

திருமதி சிறிமா பண்டாரநாயக்கா (ஸ்ரீ ல சு கட்சி) உரையாற்றுகையில்—

எனது ஆட்சிக் காலத்தின் போது இஸ்ரவேலர்களை வெளியேற்றினேன் அதன் பின் நாட்டின் பாதுகாப்பு நிலைமை கருதி அவர்கள் அழைக்கப்பட்டனர்—

காலம தாழ்த்தியேனும இஸ்ரவேலர்களை வெளியேற்ற ஜனாதிபதி எடுத்த முடிவிற்கு நாம பாராட்டு தெரிவிக்கிறோம என்றார்—

ஸ்ரீ ல சு கட்சி எம பி ஹலீம இஷாக் பேசுகையில்—

இஸ்ரவேலர்கள் நாட்டின் பாதுகாப்பிற்கு மட்டும ஆலோசனை வழங்கவில்லை விவசாய, மகாவலி, சுகாதார அபிவிருத்திகளுக்கும ஆலோசகர்களாக இங்கு வந்தனர்—

இவர்கள் இஸ்ரவேலர்கள் என்று சொல்ல முடியாத விதத்தில் அமெரிக்க கடவுச் சீட்டுகளுடன் இலங்கை வந்தனர்—

இஸ்ரவேலிய கப்பல்கள் இன்றும கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ளன.

இவர்களுடனான வர்த்தக தொடர்புகளையும இலங்கை அரசு நிறுத்த வேண்டும—

இவ்வாறு அவர் கூறினார்—

அத்தாவுட செனவிரத்ன (ஐ சோ மு) பேசுகையில்—

இஸ்ரவேலிய நலன் காப்புப் பிரிவை மூடியமைக்கு நன்றி தெரிவிக்கும அதேவேளை அவர்களுடனான சகல தொடர்புகளையும நிறுத்த [illegible]டுமென கேட்டுக் கொள்கிறேன்—

முஸ்லி[illegible] ஒன்றுபட்டு தங்களுடைய எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும—

இஸ்ரவேலர்களை அடக்க அரபு நாடுகள் ஒன்றுசேர வேண்டும.

இவ்வாறு அவர் கூறினார்.

பலஸ்தீன பிரதிநிதியும இங்கு உரையாற்றினார்—

சபாநாயகர் அல்ஹாஜ் எம எச் முகம்மது பிரதம அதிதியாக கூட்டத்தில் கலந்து கொண்டார்—

(ந-ழ)

# வடக்கு கிழக்கு

## ஆஸ்பத்திரிகளில் வைத்திய நிபுணர்கள் பற்றாக்குறை

கல்முனை, மே 19

வடக்கு, கிழக்கு ஆஸ்பத்திரிகளில் வைத்திய நிபுணர்கள் பற்றாக்குறை நிலவுகின்றது—

மன்னார், திருகோணமலை பருத்தித்துறை, வவுனியா போன்ற ஆஸ்பத்திரிகள் இதனால் பாதிப்படைந்துள்ளன எனக் கூறப்படுகின்றது—

தெல்லிப்பளையில் புற்றுநோய வைத்தியத்திற்காக கட்டிட நிர்மாணங்கள் முடிக்கப்பட்டுள்ள போதிலும ஆளணி பயிற்றப்பட்ட நிபுணர்கள், சிகிச்சைக் கதிர் உபகரணம் ஆகியன இல்லாததால் வைத்தியசாலை செயல்பட முடியாதுள்ளது எனவும அறிவிக்கப்படுகிறது—

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம ஆகிய மாவட்டங்களில் உள்ள தாதி பயிற்சிக் கல்லூரிகளில் போதனாசிரியர்களுக்கும பற்றாக்குறை நிலவுவதால் பயிற்சித் திட்டங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன—

இப்பயிற்சிக்கான போதனாசிரியர்களை மத்திய அரசு நியமிப்பதில் கவனம செலுத்தாமையே இதற்குக் காரணம் கூறப்படுகிறது—

இதனால் வடக்கு கிழக்கில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சுகாதார பரிசோதகர்களுக்கும பூரணமான பயிற்சியை வழங்க முடியாதுள்ளது என வடக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன—

(ஜ—281)

## மரக்கறி உற்பத்தியாளர் பாதிப்பு

கண்டி மே 19

மலையகத்தில் இப்பொழுது நிலவும சீரற்ற காலநிலை காரணமாக மரக்கறி உற்பத்தியாளர்கள் பெரிதும பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாத்தளை, கண்டி, ஹேவாஹெட்டை, ஹரிஸ்பத்து போன்ற இடங்களில் மரக்கறி பயிர்ச்செய்கைகள் பலவும அடை மழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன.

சாதாரண விவசாயிகள் இதன் விளைவாகப் பெரிதும பாதிக்கப்பட்டுள்ளார்கள்— கண்டி மத்திய சந்தையில் மரக்கறி வகைகளின் விலையும பெருமளவில் அதிகரித்துள்ளது.

(ஐ-017)

சாய்ந்தமருது, மட்டக்களப்பு பகுதிகளில் கடந்த ஒரு மாத காலமாக நோய் பரவி வருகிறது—

இதனை உடனடியாக தடுத்து நிறுத்த கடற்றொழில் அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறினால் நாட்டின் பொருளாதாரமே பாதிக்கப்படலாம்—

மட்டக்களப்பு, வாழைச்சேனையில் அரசாங்கம் பல

## ஐவர் சரண்

கொழும்பு, மே 20

லக்கல பகுதியைச் சேர்ந்த ஐந்து இளைஞர்கள் கொழும்பு சுதந்திர சரண் குழுவிடம சரணடைந்தனர்.

இவர்கள் ஐவரும பெற்றோர்களுடன் வந்து சரணடைந்துள்ளனர். பின்னர் களபலுவாவ என்ற இடத்தில் உள்ள தடுப்பு நிலையத்திற்கு பெற்றோர்கள் சகிதம் இவர்கள் விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.

(ந—கு)

## ...ரணிலுக்கு அஸ்வர் கோரிக்கை

கொழும்பு, மே 20

புத்தளத்தில் கடந்த பத்து மாதங்களாகக் கொள்வனவு செய்யப்படாமல் குவித்து வைக்கப்பட்டுள்ள தனியார் துறையினர் உற்பத்தி செய்த உப்பை உடன் கொள்வனவு செய்ய வேண்டும—

900 குடும்பங்களைச் சேர்ந்த 3000 பேரின் ஜீவனோபாய பிரச்சினையாக உள்ள இந்த விவகாரத்தில் உடன் தீர்வும, நிவாரணமும பெற்றுக் கொடுக்க வேண்டும—

கைத்தொழில் அமைச்சர் திரு ரணில் விக்கிரமசிங்கவிடம முஸ்லிம, சமய கலாசார ராஜாங்க அமைச்சரும, புத்தளம மாவட்ட எம பியுமான அல்ஹாஜ் ஏ எச் எம அஸ்வர் இவ்வாறு கேட்டுக் கொண்டார்.

இந்த உப்பை உப்புக் கூட்டுத்தாபனம கொள்வனவு செய்யும போது கிலோவுக்கு 10 சதம முதல் 18 சதம வரை மேலதிகமாகக் கொடுத்து கொள்வனவு செய்தால் உப்பளங்களில் தொழில் புரிவோருக்கும நன்மை கிடைக்கும என்றும அல்ஹாஜ் அஸ்வர், அமைச்சர் திரு விக்ரமசிங்காவிடம விளக்கி உள்ளார்—

இதனைத் தாம பரிசீலனை செய்து நிவாரணம வழங்குவதாக உப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு ஒகஸ்டின் டயஸ் தம்மிடம கூறியதாக அல்ஹாஜ் அஸ்வர் எம் பி "தினபதி"க்குத் தெரிவித்தார்—

அல்ஹாஜ் அஸ்வர் அண்மையில் புத்தளத்துக்கு விஜயம செய்த போது புத்தளத்தில் தனியார் மட்டத்தில் உப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் தாம எதிர்நோக்கும பல்வேறு அசௌகரியங்களை அமைச்சரிடம விவரித்தனர்—

திருடர் அட்டகாசம காரணமாக உப்பு திருடப்படுவதாகவும, மழையில் உப்பு கரைவதாகவும இதனால் தாம ஜீவனோபாயத்தை இழப்பதாகவும அவர்கள் அமைச்சரிடம தெரிவித்தனர்—

இதனைத் தொடர்ந்து அமைச்சர் அல்ஹாஜ் அஸ்வர் அமைச்சர் திரு ரணில் விக்கிரமசிங்காவிடம தொடர்பு கொண்டார்—

அமைச்சருடன் புத்தளம நகர சபைத் தலைவர் அல்ஹாஜ் எம ஐ பிஷ்ருஸ் ஹாபியும புத்தளத்தில் தனியார் உப்பளங்களுக்கு சென்று பிரச்சினைகளை நேரில் கேட்டறிந்தார்—

(ந-007)

# சந்தேக நபர்கள் விளக்க மறியலில்

கொழும்பு, மே 20

நிட்டம்புவ, வவுல்கெலேயில் 12 பேரை வெட்டிப் படுகொலை செய்த சம்பவம தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள 14 சந்தேக நபர்களும் எதிர்வரும [illegible] ஆம திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்—

மேற்படி வழக்கு விசாரணை அத்தனகலை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நடந்தது.

முறைப்பாட்டாளர் சார்பில் முக்கியமான சாட்சிகள் எவரும ஆஜராகவில்லை

இதனால் வழக்கு விசாரணை எதிர்வரும [illegible] திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது— (ந-ர)

# இத்தாலியா 90 உதைபந்து:
# ரசிகர்கள் மீது தீவிர சோதனை

## அரங்கினுள் பட்டாசு, மதுபானம் எடுத்துச் செல்லத் தடை

இத்தாலி மே 20

இத்தாலியா 90 உதைபந்தாட்டப் போட்டியின் போது அரங்குகளில் நுழையும் ஒவ்வொரு ரசிகரும இததாலிய பொலீஸாரால் தீவிர சோதனைக்குட்படுத்தப்படுவர்.

மதுபானம, பட்டாசு ஆகியவற்றை உள்ளே எடுத்துச் செல்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அரங்கினுள் பட்டாசு கொளுத்துவோர் அல்லது மைதானத்துக்குள் வான வெடிகளைச் செலுத்துவோர்க்கு பத்தாண்டு சிறைத்தண்டனை விதிக்கப்படும.

இத்தாலிய பொலிஸார் உலகக்கிண்ண ஆட்டங்களின் போது தாம எடுக்கவிருக்கும தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி அறிவித்துள்ளனர்.

உலகக்கிண்ண ஆட்டங்களைப் பார்க்க வெளிநாடுகளில் இருந்து வரும ரசிகர்களுக்கு பொலீஸாரின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றி முன்கூட்டியே விளமபரங்கள் மூலம எடுத்துக் கூறப்படும.

உலகக்கிண்ண விளையாட்டுப் போட்டி ஒரு மாத காலத்துக்கு பன்னிரெண்டு நகரங்களில் நடத்தப்படும். மேற்படி ஆட்டங்களில் பல்வேறு நாட்டு அணிகள் போட்டியிடுகின்றன.

இதனால் ரசிகர்களிடையே உணர்ச்சி மேலிட்டு வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படலாமெனவும. வீதிக் கலவரங்கள் இடமபெறலாமெனவும எதிர்பார்க்கப்படுகிறது. இதையடுத்தே பொலீஸார் கடும பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

மேற்படி ஆட்டங்களின் போது அரங்குகளில் மது விற்பனை முற்றாக தடை செய்யப்பட்டிருக்கும. குறிப்பிட்ட ஒரு ஆட்டம தொடர்பான பதாகைகளே அரங்கினுள் எடுத்துச் செல்லப்பட முடியும. (எ—032)

## முதல்தடவையாக பெண்கள் ஸ்குவாஸ்

கொழும்பு, மே 20

முதல் தடவையாக இலங்கையில் பெண்களுக்கான ஸ்குவாஷ் சாமபியன்ஷிப் நடத்தப்படவிருக்கிறது.

இந்த சாமபியன்ஷிப்பில் 16 மற்றும 19 வயதுக்குக் கீழ்ப்பட்ட வீராங்கனைகள் டன்லப் கிண்ணத்துக்காக ஸ்குவாஷ் ஆட்டங்களில் ஈடுபடுவர்.

இலங்கை மகளிர் ஸ்குவாஷ் சங்கம டன்லப் நிறுவனம மற்றும இன்டர் காண்டினன்டல் ஹோட்டல் ஆகியவற்றுடன் இணைந்து இப்போட்டியை ஏற்பாடு செய்தள்ளது. (எ—032)

## பதுளை மெய் வல்லுநர் கோஷ்டி சாம்பியன்

பதுளை, மே 19

விளையாட்டு அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட கூடைப்பந்தாட்ட போட்டிகளில் பதுளை மெய்வல்லுநர் கோஷ்டி சாமபியனானது

பதுளை பொது விளையாட்டு மைதானத்தில் போட்டிகள் இடமபெற்றன—

பதுளை மெய்வல்லுநர் கோஷ்டி பதுளை பொலீஸ் கோஷ்டியை 53—26 புள்ளி வித்தியாசத்தில் தோற்கடித்தே சாமபியனானது—

இடைவேளையின் போது மெய்வல்லுநர் கோஷ்டி 17—10 என்ற புள்ளி வித்தியாசத்தில் முன்னணியில் திகழ்ந்தது—

நான்கு கோஷ்டிகள் இப் போட்டிகளில் கலந்து கொண்டன—

இறுதிப் போட்டியில் திருவாளர்கள் என் ஜயவர்தன, ஏ ஷிலால் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர்— [எ—037]

## ஜான்சர்கான் மீது ஒழுங்கு விசாரணை

இஸ்லாமாபாத், மே 20

உலக ஸ்குவாஷ் சாமபியன் ஜான்சர்கான் மீது பாகிஸ்தான் ஸ்குவாஷ் சங்கம ஒழுங்கு விசாரணை மேற்கொள்ளும.

ஜான்சர்கான் மீது தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் உண்மையென ருசுப்படுத்தப்படுமானால் தேசிய மற்றும சர்வதேச ஸ்குவாஷ் போட்டிகளில் கலந்து கொள்வதில் இருந்து இவர் சட்டரீதியாகத் தடுக்கப்படுவார்.

சட்ட விரோத ஸ்குவாஷ் சங்கமொன்றை ஜான்சர்கான் நிறுவியுள்ளார். உள்ளூர் மற்றும வெளியூர் ஆட்டங்களின் போது அரங்கில் இவர் ஒழுங்கீனமாக நடந்து கொள்கிறார்.

பாகிஸ்தான் ஸ்குவாஷ் சங்க அதிகாரிகளுக்கு அவதூறு ஏற்படுத்தும வகையில் அறிக்கைகள் வெளியிட்டு வருகிறார், என்று இவர் பேரில் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

தொடர்ந்து பல ஆண்டுகளாக அசைக்க முடியாதவர் என்ற பெயருடன் ஸ்குவாஷ் அரங்கில் ஆட்சி செய்து வந்த ஜஹான்கிர்கானை தோல்வியடையச் செய்த ஜான்சர்கான், பாகிஸ்தானின் எதிர்கால ஸ்குவாஷ் நமபிக்கை நட்சத்திரமாக விளங்கி வருகிறார். (எ—032)

## விளையாட்டு பகுதி

## முத்திரைவெளியிட கோரிக்கை

கொழும்பு மே 20

கல்வி, சன்மார்க்கத் துறைகளில் அரும சேவை புரிந்த மார்க்க அறிஞரான மர்ஹூம மௌலவி அலவி அபுல் ஹஸன் (அல் அஸ்ஹரி) யின் நினைவாக ஞாபகார்த்த முத்திரை ஒன்று வெளியிட வேண்டும.

முஸ்லிம சமய, கலாசார, ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ எச் எம அஸ்வரிடம இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## உலகக் கிண்ண உதைபந்து: இந்தாலி வெற்றி பெறுமென கருத்து

இத்தாலி, மே 20

எதிர்வரும ஜூன் 8ஆம திகதி மிலான நகரில் உலகக் கிண்ண உதைபந்தாட்டம ஆரமபமாகிறது— இப்போட்டியில் இத்தாலிய அணியே இறுதி வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரிக்கும என்று கருத்து வெளியிடப்பட்டிருக்கிறது—

105 நாடுகளைச் சேர்ந்த விளையாட்டுத்துறைப் பத்திரிகையாளர்களிடம இப் போட்டியில் யார் வெற்றி பெறுவார் என்று கேட்கப்பட்டது— பெருமபாலானோர் இத்தாலிய அணியே வெற்றியீட்டும என்று கூறினர்—

41 பத்திரிகையாளர்கள் இத்தாலிய அணி வெற்றியீட்டுமென்றும, 37 பத்திரிகையாளர்கள் பிரேஸில் வெற்றி பெறுமென்றும கருத்து வெளியிட்டனர்— 14 பேர் நெதர்லாந்துக்கும, எண்மர் மேற்கு ஜெர்மனிக்கும மூவர் ஆர்ஜன்டீனாவுக்கும சாதகமாக கருத்து தெரிவித்தனர்—

ஆர்ஜன்டீனாவே கடந்த முறை வெற்றியீட்டி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது—

ஏற்கனவே பல சோதிடர்களும இத்தாலியே அடுத்த உலக சாமபியனாக வரும என ஆரூடம் கூறியுள்ளனர். ஆர்ஜன்டீனாவின் மரடோனா ஆகியோர் முறையே 17, 10 மற்றும ஐந்து கோல்களைப் போடலாம என இந்த ஆய்வின் மூலம தெரிய வந்துள்ளது— [எ—032]

## வானொலி

21—5—1990

காலை —

5—00 நாதாஞ்சலி
5—05 தோத்திரமாலை — காசி விஸ்வநாதர் சுப்ரபாதம
5—30 பாமாலை — திருத்தாண்டகம
5—45 சைவநற்சிந்தனை
5—50 கத்தோலிக்க நற்சிந்தனை
5—55 போதமாதவனின் போதனைகள்
6—00 வர்த்தகசேவை
6—30 செய்திகள்
6—40 செய்தித்தாள் கண்ணோட்டம
6—50 அறிவிப்புகள்
7—00 வாத்தகசேவை
7—30 பாடசாலைக் கூட்டு நிகழ்ச்சி
7—45 மாகாணச் செய்திகள்

... அழைப்பு இயக்கத்தின் 3ஆவது சாவதேச மாநாட்டு நிகழச்சிகளின் தொகுப்பு தொகுத்தளிப்பவர்; மௌலவி எம ஐ அப்துர் ரஸ்ஸாக்
8—55 வரலாற்றில் ஓர் ஏடும குறிப்பும ஸலவாத்தும
9—00 செய்திகள்
9—10 அறிவிப்புகள்
9—20 பக்திப்பாடல்கள்
9—30 பேச்சு — கவிதைக்கலை — கவிஞர் சோ பதுமநாதன்
9—45 அகில இந்திய வானொலி நிலைய ஒலிப்பதிவு — சீர்காழி கோவிந்தராஜன்
10—45 குரலவழிகை
11—00 ஒலிபரப்பு முடிவு

வானொலி

22—5—1990

காலை —

5—00 நாதாஞ்சலி
5—05 தோத்திரமாலை — ஸ்ரீகாயத்ரிதேவி சுப்ரபாதம
5—30 பாமாலை —

8—05 பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும தெற்காசிய நாடுகளுக்கான உலக இஸ்லாமிய அழைப்பு இயக்கத்தின் கான 3ஆவது சர்வதேச மாநாட்டு நிகழ்ச்சிகளின் தொகுப்பு தொகுத்தளிப்பவர்; மௌலவி எம ஐ அப்துர் ரஸ்ஸாக்
8—25 கிராஅத்
8—30 நாடகம — வாழ்க்கையின் வெற்றி. எழுதியவர்; எம ஏ முஹமமத்
8—55 வரலாற்றில் ஓர் ஏடும குறிப்பும ஸலவாத்தும
9—00 செய்திகள்
9—10 அறிவிப்புகள்
9—20 பக்திப்பாடல்கள்
9—30 கலையகத்தில் கலைஞர் ராமகுமாரசாமி
10—00 தாளவாத்தியக் கச்சேரி — ஸ்ரீதரன் வேல்முருகு
10—30 ...

## விமான சேவைகள்

| மே 21 (திங்கட்கிழமை) | மே 22 (செவ்வாய்க்கிழமை) |
|---|---|
| வந்த சேரும நேரம | வந்த சேரும நேரம |

## மே 21 (திஙகட்கிழமை)

### வந்து சேருமு நேரம

| | | | | |
|---|---|---|---|---|
| 0535 | கராச்சி, பமபாய் | யூ | எல் | 182 |
| 0650 | லண்டன், டுபாய் | யூ | எல் | 504 |
| 0725 | சிப்பல், பாரீஸ், அபுதாபி | யூ | எல் | 564 |
| 0805 | பிராஙக்போட், சூரிச், டுபாய் | யூ | எல் | 545 |
| 0810 | டுபாய், மாலைதீவு | ஈ | கே | 802 |
| 0825 | குவைத் | யூ | எல் | 228 |
| 1140 | சென்னை, திருவனந்தபுரம | ஐ | சி | 573 |
| 1155 | மாலைதீவு | யூ | எல் | 102 |
| 1305 | மாலைதீவு, டுபாய் | ஈ | கே | 803 |
| 1415 | மாஸ்கோ, கராச்சி | எஸ் | யூ | 543 |
| 1500 | திருவனந்தபுரம, திருச்சி | ஐ | சி | 507 |
| 1550 | திருவனந்தபுரம | யூ | எல் | 162 |
| 1800 | திருச்சி, சென்னை | ஐ | சி | 577 |
| 1945 | பாஙகொக் | யூ | எல் | 403 |
| 2005 | கோலாலமபூர், சிஙகப்பூர் | யூ | எல் | 313 |
| 2115 | நொரிடா, புக்கியோகா | யூ | எல் | 407 |

### புறப்படுமு நேரம

| | | | | |
|---|---|---|---|---|
| 0830 | மாலைதீவு | யூ | எல் | 101 |
| 0910 | டுபாய், மாலைதீவு | ஈ | கே | 802 |
| 0930 | கோலாலமபூர், சிஙகப்பூர் | யூ | எல் | 312 |
| 1000 | பாஙகொக் | யூ | எல் | 402 |
| 1235 | சென்னை, திருவனந்தபுரம | ஐ | சி | 573 |
| 1300 | திருவனந்தபுரம | யூ | எல் | 161 |
| 1405 | மாலைதீவு, டுபாய் | ஈ | கே | 803 |
| 1615 | மாஸ்கோ, கராச்சி | எஸ் | யூ | 543 |
| 1540 | திருவனந்தபுரம, திருச்சி | ஐ | சி | 507 |
| 1840 | திருச்சி, சென்னை | ஐ | சி | 577 |
| 2100 | சென்னை | யூ | எல் | 121 |
| 2115 | மஸ்கட் | யூ | எல் | 209 |
| 2140 | குவைட் | யூ | எல் | 227 |

## மே 22 (செவ்வாய்க்கிழமை)

### வந்து சேருமு நேரம

| | | | | |
|---|---|---|---|---|
| 0030 | சென்னை | யூ | எல் | 122 |
| 0610 | சூரிச், சார்ஜா, மாலைதீவு | பி | பி | 602 |
| 0640 | மஸ்கட் | யூ | எல் | 210 |
| 0700 | அபுதாபி, மஸ்கட் | ஜீ | எப் | 4144 |
| 0800 | டுபாய் | ஈ | கே | 800 |
| 0915 | குவைத் | யூ | எல் | 132 |
| 1020 | திருச்சி | யூ | எல் | 132 |
| 1140 | சென்னை, பமபாய் | ஐ | சி | 573 |
| 1210 | சோபியா, அபுதாபி, பாஙகொக் | எல் | இசட் | 595 |
| 1405 | திருவனந்தபுரம | யூ | எல் | 162 |
| 1555 | மாலைதீவு | யூ | எல் | 102 |
| 1755 | பமபாய், சென்னை | ஐ | சி | 586 |
| 2050 | கராச்சி, மாலைதீவு | பி | கே | 774 |
| 2230 | சிஙகப்பூர் | எஸ் | கியூ | 402 |
| 2230 | பாஙகொக், அபுதாபி, சோபியா | எல் | இசட் | 596 |
| 2315 | சென்னை | யூ | எல் | 122 |

### புறப்படுமு நேரம

| | | | | |
|---|---|---|---|---|
| 0130 | டுபாய், லண்டன் | யூ | எல் | 503 |
| 0715 | சூரிச், சார்ஜா, மாலைதீவு | பி | பி | 602 |
| 0730 | திருச்சி | யூ | எல் | 131 |
| 0815 | அபுதாபி, மஸ்கட் | ஜீ | எப் | 4144 |
| 0915 | டுபாய் | ஈ | கே | 800 |
| 1115 | திருவனந்தபுரம | யூ | எல் | 161 |
| 1200 | மாலைதீவு | யூ | எல் | 101 |
| 1235 | சென்னை, பமபாய் | ஐ | சி | 573 |
| 1315 | சோபியா, அபுதாபி பாஙகொக் | எல் | இசட் | 595 |
| 1730 | ரியாத் | யூ | எல் | 271 |
| 1840 | பமபாய், சென்னை | ஐ | சி | 586 |
| 1945 | சென்னை | யூ | எல் | 121 |
| 2200 | கராச்சி, மாலைதீவு | பி | கே | 774 |
| 2345 | சிஙகப்பூர் | எஸ் | கியூ | 402 |
| 2330 | பாஙகொக், அபுதாபி, சோபியா | எல் | இசட் | 596 |

குறிப்பு:— யூ எல் — எயர் லஙகா, ஐ சி — இந்தியன் எயர் லைன்ஸ், ஈ கே — எமிரேட்ஸ், எஸ் யூ — ஏரோபுளொட், ஜீ எப் — கல்ப் எயர், யூ டி — யூ டி ஏ டி எப் — கொண்டோர் எஸ் கியூ — சிஙகப்பூர் எயர் லைன்ஸ், பி கே — பாகிஸ்தான் இன்டர்நேஷனல் எயர் லைன்ஸ் கே யூ — குவைத் எயர்வேய்ஸ், எஸ் வீ — சவூதியா, எஸ் டி — ஸ்டேர்லிங எயர் லைன்ஸ், டி ஜி — தாய் எயர் வேய்ஸ், பி பி — பால் எயர், எல் இஸட் — பிரத்தியேக சேவை, எல் டி — பிரத்தியேக சேவை, — டி கே பிரத்தியேக சேவை, — கே எல் — றோயல் எயர் லைன்ஸ்,

விமான சேவைகள் மாற்றமு பற்றி அறியத் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கமு 452218, [விமான நிலையம்]

முறை வெற்றியீட்டி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது—

ஏற்கனவே பல சோதிடர்களும இத்தாலியே அடுத்த உலக சாமபியனாக வருமு என ஆருடம் கூறியுள்ளனர்— இக் கிண்ணத்தைக் கைப்பற்றலாம் என பிறேஸில் மற்றும நெதர்லாந்து அணிகள் எண்ணியுள்ளன— வெற்றிப் பின்னைக் கவனிக்கும் இத்தாலி இறுதியில் வெற்றியீட்டுமு என்று கூறப்படுகிறது—

இத்தாலி இதுவரை மூன்று தடவைகள் இக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது—

உலகக் கிண்ணப் போட்டியில் அதிக கோல்களை நெதர்லாந்தைச் சேர்ந்த மார்க்கோ வான் பாஸ்டனே போடுவார் என்று மேற்படி ஆய்வில் பெருமபாலானோர் கருத்துத் தெரிவித்துள்ளனர்—

கடந்த ஆண்டு ஐரோப்பிய கிண்ணப் போட்டியில் இவரது உதவியுடனேயே நெதர்லாந்து ஐரோப்பியக் கிண்ணத்தைக் கைப்பற்றியது—

பிறேஸில் நாட்டு கரிகா மற்றும ரொமாரியோ, அர்ஜன்டீ

---

## முதலிடம்

பதுளை, மே 19

பதுளை மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையே நடைபெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் ஆலி எலயைச் சேர்ந்த பி பொன்னமபலம முதலாமிடத்தைப் பெற்றார்—

போட்டியாளர்கள் பதுளையில் ஆரமபித்து ஆலி—எல கெடேவாதா ஹல்பே வரை சென்று மீண்டும பதுளையை வந்தடைந்தனர்—

இப் போட்டியில் இரண்டாமிடத்தை அப்புக்களை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த ஸ்ரீசுந்தர பண்டாரவும் மூன்றாமிடத்தை ஆலி—எல உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த சி சுந்தரலிங்கமும சுவீகரித்துக் கொண்டனர்—

[எ-037]

7-00 வாத்தகசேவை
7-30 பாடசாலைக் கூட்டு நிகழ்ச்சி
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தகசேவை
8-00 வாதஇயவிருந்து
8-15 மெல்லிசைப்பாடல்கள்
8-30 மாதர் மஜ்லிஸ் நெஞ்சோடு நெஞ்சம பிரதி: பிர்தௌஸியா ஆப்தீன்
9-00 வாத்தகசேவை

பகல் —
10-00 இசையமுதம
10-30 வயலின் — கமலா அச்சுதன்
11-00 இசைக்கச்சேரி — மதுரை சோமு
12-00 வாத்தகசேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தகசேவை

மாலை —
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 பக்திநெறி
6-30 இசைப்பேருரை — திருமதி மீனாட்சி பொன்னுத்துரை
7-00 நாடக மேடைப் பாடல்கள் — பி கனகரத்தினம, வி மார்க்கண்டு, வி என் செல்வராஜன், வி செல்வரத்தினம பாடியுள்ளவை
7-30 அங்கும இங்குமு — கே பி சோமசுந்தரம
7-50 உலகச்செய்திகள்

இரவு —
8-00 தர்ஜமதுல்குர்ஆன்
8-05 முஸ்லிம உலகம — வாரமஞ்சரி தொகுப்பு; அல்ஹாஜ் என் எம அமீன்
8-15 இஸ்லாமிய வரையறை தொடர் பேச்சு பேசுபவர்; மௌலவி எம எம ஏ முபாரக்
8-25 கொழுமபு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும தெற்காசிய நாடுகளுக்கான உலக இஸ்லாமிய

5-00 நூதாஞ்சலி
5-05 மதாத்தரமாலை — ஸ்ரீநூயதாம்தவி சுபரபாதம
5-30 பாமாலை — முருகன் பாடல்கள்
5-45 சைவநற்சிந்தனை
5-50 இஸ்லாமிய நற்சிந்தனை மௌலவி எச் உமர்தீன்
5-55 பக்திப்பாடல்
6-00 வாத்தகசேவை
6-30 செய்திகள்
6-40 செய்த்தாள் கண்ணோட்டம
6-50 அறிவிப்புகள்
7-00 வாத்தகசேவை
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தகசேவை
8-00 நாதவினோதம
8-15 மெல்லிசைப்பாடல்கள்
8-30 மாதர் மஜ்லிஸ் பிரதி; நெயரஹீம சஹீட்
9-00 வாத்தகசேவை

பகல் —
10-00 உரைச்சித்திரம — தேசிய வீரர் தின உரைச்சித்திரம, எழுதியவர்; வீ ஏ சிவஞானம
10-30 பாட்டு — பி வி ராமன்
11-00 வீணைக்கச்சேரி — எஸ் பாலச்சந்தர்
11-45 பிதா லொறு நினைவு முத்திரை வெளியீடு சித்திரம
12-00 வர்த்தகசேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தகசேவை

மாலை —
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 சைவநெறி
6-30 பொலீஸாருமு நாமுமு
6-45 கத்தோலிக்க சிறுவர் நிகழ்ச்சி — மலர்வேந்தன்
7-00 இளைஞர் மன்றமு — த தேவதாஸ்
7-30 சிலப்பதிகார யாத்திரை— கலாநிதி பொ பூலோகசிஙகம
7-50 உலகச்செய்திகள்

இரவு —
8-00 தர்ஜமதுல்குர்ஆன்

ராமகுமாரசாமி
10-00 தாளவாத்தியக் கச்சேரி — ஸ்ரீதரன் வேல்முருகு
10-30 மெல்லிசைப்பாடல்கள்
10-45 பஜன்
11-00 ஒலிபரப்பு முடிவு

# டெலிவிஷன்

## ரூபவாஹினி

21—5—1990

4-30 கல்விநிகழ்ச்சி — சிஙகளம
5-00 செய்திகள் — சிஙகளமு
5-15 காட்டூன் படமு
5-30 "வளருமு உலகம"
6-00 மும்மணிகளுக்கு அஞ்சலி
6-15 தமிழ்ப் பாடல்கள்
6-30 செய்திகள் — தமிழ்
7-00 தமிழ் நாடகம
7-30 கொவிதுனய் திலிமகய்
8-00 செய்திகள் — சிஙகளம
8-30 "பிரைவட் பெஞ்சமின்"
9-00 "ஸ்வர ரஙக"
9-30 செய்திகள் — ஆஙகிலம
10-00 "டேட் லைன்"
10-15 "பெஸ்ட் எமங ஈக்குவல்ஸ்"
11-05 ஒளிபரப்பு முடிவு

## ஐ. டி. என்.

21-05-90 திஙகள்
6-00 மும்மணிகளுக்கு அஞ்சலி
6-15 கொக்ஸ்ஷெல் பே
6-30 செய்திகள் — சிஙகளமு
7-00 சுவசன லொவ
7-30 மதுரசாஙக
8-00 பியூட்டி அன்ட் த பெஸ்ட்
8-30 "மூவிங"
9-00 "பொன்ஸொயிர்"
9-30 பிரெஞ்சு திரைப்படமு
10-00 செய்திகள் — ஆஙகிலமு
10-20 பிரெஞ்சு திரைப்படத் தொடர்ச்சி

தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறுதோறும் வெளிவரும்

## 'லொட்டோ'

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் இழுக்கப்பட்ட 72 ஆவது "லொட்டோ" சுவீப் சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு:

வெற்றி பெறும் எண்கள்

**14 39 27 17**
**31 13**

## சம்மாந்துறையில்

# 12 பொலீஸார் கடத்தப்பட்டனர்

தொழும்பு, மே 20

பன்னிரெண்டு பொலீஸ் உத்தியோகத்தர்கள் கடத்திச் செல்லப்பட்டனர். அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதில் ஆறு பொலீஸார் காயமடைந்தனர். அவர்கள் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை சம்மாந்துறையில் நடைபெற்றது.

கடத்தப்பட்ட பொலீஸாரில் இருவர் ரிசர்வ் படையைச் சேர்ந்தவர்களாவர்.

காயமடைந்த பொலீஸார் அம்பாறை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஒரு மாதத்துக்கு முன்னர் கல்முனையில் நடைபெற்ற ஒரு சம்பவம் தொடர்பாகவே இவர்கள் கடத்திச் செல்லப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு மணித்தியால விசாரணையின் பின்னர் 12 பேரும் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த 15 ஆம் திகதி கல்முனை பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த 12 பொலீஸார் கடத்திச் செல்லப்பட்டு கல்முனை நகரில் நடந்த சம்பவம் தொடர்பாக விசாரிக்கப்பட்டனர். (ந-032)

## மலையக தோட்ட தொழிலாளர்களின்

# இந். பிரஜாவுரிமை விவகாரம்

# முடிந்துபோன கதை

### பேச்சு அவசியமில்லை என்கிறார் ரஞ்சன்

தொழும்பு, மே 20

மலையக தோட்டத் தொழிலாளர்களின் இந்திய பிரஜாவுரிமை தொடர்பாக எந்தவிதமான பேச்சுவார்த்தையும் அவசியமில்லை. அது ஏற்கனவே முடிந்து போன ஒரு கதை—

சபை ஒத்தி வைப்பு வேளையின் போது எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றிற்குப் பதில் அளித்த தோட்டத் தொழிற்றுறை அமைச்சரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்ன இப்படிக் கூறினார்.

'தற்பொழுது தாயகம் திரும்ப முடியாத நிலையில் உள்ள ஒரு லட்சம் இந்திய தொழிலாளர்களின் பிரஜாவுரிமை தொடர்பாக மீண்டும் பேச்சு வார்த்தை ஒன்று நடத்தப்படுமா?

தாயகம் திரும்பும் தொழிலாளர்களுக்கு ஒப்பந்தப்படி இந்திய அரசு மறுவாழ்வு உதவிகளை வழங்க வேண்டும் என்று இலங்கை அரசாங்கம் வற்புறுத்துமா?

இவ்விடயம் தொடர்பாக மனிதாபிமான அடிப்படையில் பரிசிலனை செய்ய வேண்டும். மேலும் முத்தரப்பு பேச்சு வார்த்தை ஒன்று நடத்தி புதிய ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட வேண்டும் என்று இ தொ கா கூறி உள்ளது—

இது தொடர்பாக அரசின் நிலைப்பாடு என்ன?

இவ்வாறு ஸ்ரீ ல சு கட்சி உறுப்பினர் திரு தர்மசிறி சேனாநாயக்க அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதில் அளித்த அமைச்சர் விஜேரத்ன கூறியதாவது—

இந்தியப் பிரஜாவுரிமை தொடர்பாக புதிதாக பேசுவதற்கு ஒன்றும் இல்லை. அது முடிந்து விட்ட கதை. இப்பொழுது அவர்களை இந்தியா திருப்பி அழைப்பது தொடர்பாகவே இந்திய அரசுடன் பேசி வருகின்றோம்.

இது பற்றி இ தொ கா கூறும் ஆலோசனைகளும் பரிசிலனை செய்யப்படும்.

வட மாகாணத்தில் ஏற்பட்டிருந்த தீவிரவாத நடவடிக்கைகளினால் ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டன.

இப்பொழுது தலைமன்னார் இறங்குதுறை நவீனமயப்படுத்தப்பட்டு, குடிவரவு குடியகல்வு பிரிவும், சுங்கப் பரிசோதனைப் பிரிவும் அமைக்கப்பட்டுள்ளன.

எனவே கூடிய விரைவில் தலைமன்னார், இராமேஸ்வரம கப்பல் சேவையை ஆரம்பிக்கும்படி இந்திய அரசிடம் கேட்டுள்ளோம.

தாயகம் திரும்பும் தொழிலாளர்களுக்கும் மறுவாழ்வு உதவிகளை வழங்க வேண்டியது இந்திய அரசின் கடமை. இவ்விடயத்தில் நாம தலையிட முடியாது—

இப்படி திரு ரஞ்சன் விஜேரத்ன பதில் அளித்தார். (ந-ய)

## எம். பிக்கள் பாதுகாப்பு மேலும் ஒரு மாதம் நீடிப்பு

தொழும்பு, மே 20

எம் பிக்களுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கவும்—

இவ்வாறு சபாநாயகர் அல்ஹாஜ் எம எச் முகமமது தோட்டத்துறை, பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு ரஞ்ஜன் விஜேரத்னவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்—

எம் பிக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது சபாநாயகரின் பொறுப்பு என்பதை ஏனைய கட்சித் தலைவர்களும் சபாநாயகரிடம் சுட்டிக் காட்டியதைத் தொடர்ந்தே சபாநாயகர் மேற்படி கோரிக்கையை விடுத்தார்—

இது தொடர்பாக தனக்கு சுயமாக தீர்மானத்தை எடுக்க முடியாது எனவும பாதுகாப்பு சபையுடன் கூடி முடிவுகளை தெரிவிப்பதாகவும் திரு ரஞ்சன் விஜேரத்ன சபாநாயகரிடம தெரிவித்துள்ளார்—

இத்தகவலை திரு தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்— [ந—ழ]

## வெங்காய விற்பனை

கொழும்பு, மே 20

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் கையிருப்பில் உள்ள இரண்டாம ரக பெரிய வெங்காயத்தைத் தனியார் துறையினருக்கு விற்பனை செய்ய தீர்மானிக்கப் பட்டுள்ளது,

சந்தையில் வெஙகாயத்துக்கு இருக்கும தட்டுப்பாட்டைப் போக்கவே இந்த ஏற்பாடு,

வெலிசறை மெக்கலம வீதி களஞ்சியசாலைகளில் உள்ள வெஙகாயமே இவ்வாறு விற்பனை செய்யப்படும.

மெக்கலம களஞ்சிய மேலதிக பொது முகாமையாளர் திரு ஜயந்த பெர்னாண்டோ இதனைக் கூறினார். (ந-007)

# தேயிலை தோட்டப் பகுதிகளில் சுவரொட்டிகள் இருக்கவில்லை:

### மனுதாரர் தரப்பில் சாட்சியம்

தொழும்பு, மே 20

பசறை தொகுதியின் நகர் மற்றும கிராமப் புறஙகளில் மட்டுமே எச்சரிக்கை சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. இத்தொகுதியின் தேயிலைத் தோட்டஙகளில் இவை காணப்படவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேபனை மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது மனுதாரர் தரப்பில் சாட்சியமளித்த டி எம முதலிஹாமி இப்படித் தெரிவித்தார்.

சட்டத்தரணி— டிசமபர் 19ஆம திகதி நீர் வீட்டை விட்டு வெளியேறினீரா?

சாட்சி— வீட்டிலேயே தஙகியிருந்தேன். வாக்களிக்கச் செல்லவில்லை.

சட்டத்தரணி— நீர் பார்த்த அமஹூவகைச் சுவரொட்டிகள் ...

சாட்சி— அவரிடம ஆயுதங்கள் இருக்கவில்லை.

சட்டத்தரணி— தோல்வியுற்ற பசறைப் பகுதி வேட்பாளர்களுக்கும அரசாஙகம ஆயுதஙகளை வழஙகியிருந்ததா?

சாட்சி— ஆம.

சட்டத்தரணி— தோல்வியுற்ற வேட்பாளர்களுக்கும ஆயுதஙகள் வழஙகப்பட்டதாக நீர் கூறுகிறீர்?

சாட்சி— ஆம.

சட்டத்தரணி— இவர் இன்னும உயிருடன் இருக்கிறாரா?

சாட்சி... ஆம. இவர் ஐக்கிய சோஷலிஸ முன்னணியின் ஊவா மாகாண சபை உறுப்பினர். (ந-032)

**ஜனாதிபதி தேர்தல் வழக்கு**

## குவைத்தில் தொழில் வாய்ப்பு

முஸ்லிம்—

முஸ்லிம் அல்லாதார்

| | சமபளம கே டீ | வயது |
|---|---|---|
| I பெண்கள் பாடசாலைக்குப் | 30/- | 20—35 |

## வேலை வாய்ப்புக்கள்

I, பாஹ்றெயின் (Bahrain)

முஸ்லிம்—

முஸ்லிம் அல்லாதார்

| | | சமபளம் கே டீ | வயது |
|---|---|---|---|
| 1 | பெண்கள் பாடசாலைக்குப் பணிப் பெண்கள் 8 மணி நேர வேலை (காலை 6-00...பி ப 2-00) | 30/- | 20—35 |
| 2 | வீட்டுப் பணிப்பெண்கள் | 30/- | 20—35 |
| 3 | தையற்காரர்கள் ஆண்/பெண் இரு பாலாரும் | 60/- | 25—35 |
| 4 | தச்சர் (காபெண்டர்) | 60/- | 25—35 |
| 5 | சாரதிகள் (இலங்கை, குவைத், மத்திய கிழக்கு லைசன்ஸ் உள்ளவர்கள்) | | 25—38 |

அனைவருக்கும் உணவு, தங்குமிடம, வைத்திய வசதிகள் வழங்கப்படும-

1) விண்ணப்பப்பத்திரம
2) 6 பாஸ்போட் சைஸ் படங்கள்
3) 1 முழு கலர் படம (பெண்களுக்கு மட்டும) சகிதம

தொழிலை கவரின் இடப்பக்கத்த மேல் மூலையில் எழுதி பதிவுத் தபாலில் அனுப்பவும-

நேரடித் தொடர்பு இல்லை-

முக்கிய குறிப்பு-

சப் ஏஜென்ட்கள் தொலைபேசி மூலம தொடர்பு கொள்ளவும- தொலைபேசி இல- 507855

**Sailan Travels &**

**Employment Agency**

No 32, Milagiriya Avenue
Colombo — 4

Telefax 0941—505646 Telex: 25652 Lowe CC

லைசன்ஸ் இல- 693
தொழில் அங்கீகார இல- ஏ எல்/693/1/10

யாழ்ப்பாணத்தில் தொடர்பு கொள்ளும இடம-

**சிவா வொச் வர்க்ஸ்**

185, மொடன் மார்கட்,
யாழ்ப்பாணம.

இப்பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இன்டிபெண்டன்ட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை கொழும்பு 12, இலங்கை, தபால் பெட்டி இல 1613 வெளியிட்ட திகதி 21 மே 1990.

DINAPATHI, 5, Gunasena Mawatha, Colombo — 12
P.O Box 1613.

இவை காணப்படவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேபனை மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது மனுதாரர் தரப்பில் சாட்சியமளித்த டி எம முதலிஹாமி இப்படித் தெரிவித்தார்.

திரு பிரேமதாச ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டியது செல்லுபடியாகாது என்று தெரிவித்து திருமதி சிறிமா பண்டாரநாயக்க உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு பிரதம நீதியரசர் பாரிந்த ரணசிங்க, நீதியரசர்கள் எச் டி தமபையா, ஜி பி எஸ் டி சில்வா, எம ஜமீல், பி இராமநாதன் அகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சாட்சி முதலிஹாமியை மனுதாரர் தரப்பு சட்டத்தரணி நிஹால் ஜயமான விசாரித்தார்.

பசறைத் தொகுதியில் மூன்று வகையான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. டிசமபர் 17ஆம திகதி முதல் 19ஆம திகதி நள்ளிரவு வரை ஊரடங்கு அமுலில் இருக்குமென ஒருவகை சுவரொட்டிகளில் எழுதப்பட்டிருந்தன.

ஐக்கிய சோஷலிஸ முன்னணியின் ஊவா மாகாண உறுப்பினர் லீலாரத்னவைக் கொலை செய்ய மூன்று தடவைகள் முயற்சி செய்யப்பட்டது.

இப்படி தமது சாட்சியத்தில் அவர் தெரிவித்தார்.

சட்டத்தரணி ஜயமான— டிசமபர் 16ஆம திகதி நீர் லந்தேவலையுடன் இணைந்து பசறை தொகுதியில் சுற்றுப் பயணம மேற்கொண்டீரா?

சாட்சி— ஆம. அப்போது ஊரடங்கு உத்தரவை விடுக்கும சுவரொட்டிகளைக் கண்டேன்.

சட்டத்தரணி— டிசமபர் 17ஆம திகதி நீர் லந்தேவலையின் சடலத்துடன் பதுளை சென்று இரவு வீடு திருமபினீர்?

சாட்சி— ஆம.

சட்டத்தரணி— அன்றிரவு நீர் வீட்டில் தங்கினீரா?

சாட்சி— அச்சம காரணமாக என் குடுமபத்தாருடன் வேறிடமொன்றில் நான் தங்கினேன்.

அமமுவகைச் சுவரொட்டிகள் ... நீர் கூறுகிறீர்?

## ஜனாதிபதி தேர்தல் வழக்கு

தேயிலைத் தோட்டங்களிலும ஒட்டப்பட்டிருந்தனவா?

சாட்சி— தோட்டங்களில் நான் அவற்றைக் காணவில்லை.

சட்டத்தரணி— நகர் மற்றும கிராமப்புறங்களில் மாத்திரமே இவை காணப்பட்டன?

சாட்சி— ஆம.

சட்டத்தரணி— கொலையுண்ட லீலரத்ன தொகுதியில் பிரபலமானவரா?

சாட்சி— ஆம.

சட்டத்தரணி— ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது லந்தேவல தன் பாதுகாப்பின் நிமித்தம அயுதங்களைத் தமமுடன் வைத்திருந்தாரா?

சாட்சி— ஆம. அப்போது பசறை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக டபிள்யூ எம கருணாரத்ன விளங்கி வந்தார். இவர் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்.

சட்டத்தரணி— இவருக்கும அரசாங்கம ஆயுதம வழங்கியதா?

சாட்சி— ஆம.

சட்டத்தரணி— அனுமதியுடன் கூடிய சாதாரண துப்பாக்கி கூட லந்தேவலையிடம இருக்கவில்லையா?

சாட்சி— இல்லை.

சட்டத்தரணி— படல்குமபுரவைச் சேர்ந்த லீலாரத்னவை நீர் அறிவீரா?

## ஜீ. சி. ஈ. (உ. த) பரீட்சை

## ஒத்திவைப்புபற்றி பரிசீலனை

—சுனேத்ரா

கொழும்பு, மே 20

ஆகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும ஜீ சி ஈ உயர்தரப் பரீட்சையை டிசம்பர் மாதம வரை ஒத்தி வைப்பது தொடர்பாக கல்வி அமைச்சர் பரிசீலனை செய்வார்-

கல்வி திட்ட அமைச்சர் திருமதி சுனேத்ரா ரணசிங்க கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் இவ்வாறு கூறினார்.

சபை ஒத்திவைப்பு வேளையின் போது ஐக்கிய சோஷலிச முன்னணி உறுப்பினர் திரு அத்தாவுட செனவிரத்ன எழுப்பிய கேள்வி ஒன்றிற்குப் பதில் அளித்தம போதே அவர் இதைச் சொன்னார்-

மாணவர்களின் நன்மையைக் கருதி இப் பரீட்சையை டிசம்பர் மாதம வரை ஒத்திவைப்பதுடன் ஜீ சி ஈ உயர்தரப் பரீட்சையுடன் சாதாரணப் பரீட்சையையும டிசமபர் மாதத்திலேயே நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும என்று திரு அத்தாவுட செனவிரத்ன கல்வி அமைச்சரிடம் கேள்வி எழுப்பிப் பேசினார்-

இக்கேள்விக்கு அமைச்சரின் சார்பில் பதில் அளித்த கல்வி திட்ட அமைச்சர் திருமதி சுனேத்ரா ரணசிங்க —

இவ்விடயம் தொடர்பாக கல்வி அமைச்சர் பரிசீலனை செய்து வருகிறார். இது தொடர்பாக கூடிய விரைவில் தீர்மானிக்கப்படும என்று கூறினார்-

[நு—ய]

**வேலை வாய்ப்புக்கள்**

**I பாஹ்றெயின் (Bahrain)**

| | | பாஹ்றெயின் டினுர் | இலங்கை ருபா |
|---|---|---|---|
| 1 | மெக்கானிக் (டீசல், பெற்றோல்) Machanic (Diesel & Petrol) | 80—100 | 8000/—10,000/- |
| 2 | ரிங்கர் (Tinker) | 80—100 | 8000/-—10,000/- |
| 3 | பிளமபர் (Plumber) | | |
| 4 | ஓட்டோ எலெக்ரிசியன் (Auto Electrician) | 80—100 | 8000/—1,000/- |
| 5 | கார் வெல்டர் (Car Welder) | 80—100 | 8000/—10,000/- |
| 6 | ஓட்டோ மெக்கானிக் (Auto Mechanic) | 80—100 | 8000/—10,000/- |
| 7 | லேத் மென் (Lathemen) | 80—100 | 8000/—10,000/- |
| 8 | யூக்கி மெசின் இயக்குனர்கள் (Juki Machine Operators) | 70—90 | 7000/—9000/- |

**11 றியாட் Riyadh (KSA)**

| | | சவூதி றியால் | இலங்கை ருபா |
|---|---|---|---|
| 1 | றெயிலர் டிரைவர் (Trailor Driver) | 700 ச றி | 7000/- |

- இரண்டு வருட ஒப்பந்தம
- உணவ தங்குமிட வசதி இலவசம
- மேலதிக விபரங்களுக்கு பாஸ்போட், பாஸ்போட் அளவுப் படம 6, தகுதி சான்றிதழ்கள் சகிதம நேரில் வரவும-

**111 வீட்டுப் பணிப் பெண்கள் (Housemaids)**

சிங்கப்பூர்-ஓமான், சவூதி அரேபியா-குவைத், டுபாய், பாஹ்றெயின் ஆகிய நாடுகளுக்கு

- பாஸ்போட், பாஸ்போட் அளவு படம6, முழு அளவு கலர் படம 2 இவைகளுடன் நேரில் வரவும-

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி-

**HORIZON ENTERPRISES**

No 9, 19th Lane, Kollupitiya
Colombo — 3

(சைனீஸ் லோட்டஸ் ஹோட்டல் முன்பாக கடற்கரைப் பக்கம செல்லும லேன்)

- லேபர் லைசன்ஸ் இலக்கம- 609
- அனுமதிப் பத்திர இலக்கம- ஏ எல்/609/13/90, ஏஎல்/609/14/90

நாட்டின் சகல பாகங்களுக்கும சப் ஏஜண்டுகள் தேவை.

- சப் ஏஜன்டுகளுக்கு முன் உரிமை வழங்கப்படும-